بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பததிராதிபா — கூ அ அபதுல மஜீத

வாலயூம 4	1927ஹு மேமீ	பகுதி 5

ஜுமஆ, ரத குதபா பிரசவ்ண

1

ஜுமஆ ரத ஆகிய குதபாககளை துஆயெமாலனவரவினளவு அரபிபாஷையில ஓதிபபிறகு அவைகா கேடபோருககு விளஙகும பாஷையில உபதேசிபபனவாக விருககவேணடு மெனறு, இமாமுல ஹிநது மொலானா அபுலகலாம ஆஜாத அவாகா 1913 வது வருடம நவமபா மாதம 5உயில வரைநதுள்ள வியாசததை இசசஞசிகையின வேறு பககஙகளில பிரசுரிககப படடிருககின்றது

மொலானா அபுலகலாம ஆஜாத அவாகா குதபாககளை யொட்டி யெழுதியுள்ள வியாசததை நான கணணுறற காலமுதற கொணடு நமநாடடு உலமாககா மொலானா அவாகளின அபிபபிரா யததை ஏறறுககொளளுங காலததை யெதிாபாாததது எனறு லியனறவரை வேலைசெயது வருகிறேன

பததுவருடஙகளுககு முன பணடார வாடையில சுமாா 4 வருடகாலம வரை இருநது மதரஸா முதலியவைகளை ஏறபடுததி முஸலிமகளின முனனேறறததைககோரி உணமையாகவே உழைததுக கொணடிருநத ஜனாப மௌலவி, ஸூபி ஹஜரத ஜைனுல ஆபி

தீன் மர்ஹூம் அவர்கள், மௌலானா அவர்களின் அபிப்பிராயத்தை உடனே அங்கீகரித்து, ஜும்ஆவன்று பண்டாரவாடை பெரிய மஸ்ஜிதின் மிம்பரிலேறி குத்பா ஓதினார்கள். நம்மாணவர்களுக்குச் சிறுவயதிலேயே அரபி பாஷையைக் கற்றுக்கொடுப்பதற்குரிய வழியைத் தீர்மானிக்கும் பொருட்டு, ராஜகிரி அஞ்சுமனே இத்திஹாதுல் இஸ்லாம் சங்க ஆதரவில் நடைபெற்ற உலமாக்கள் மகாநாட்டில், ஜனாப் ஸூபி ஹஜ்ரத் அவர்கள் நம்மவர் அரபிபாஷையைத் தெரிந்து கொள்ளும் வரை "குத்பாக்கள் நம்பாஷையில் ஓதப்படவேண்டுமெ"ன்று வற்புறுத்திப் பேசினார்கள். (யான் அவ்வமயம் அஞ்சுமனின் காரியதரிசியாக விருந்தேன்.) 3-வருடங்களுக்கு முன் மதரஸயெ காஸிமியாவில் மௌலானா, மௌலவி, முப்தி, ஜனாப் முஹம்மது தமீம் ஆலிம் சாஹிப் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்ற மகா நாட்டில் "ஜும்ஆவின் குத்பாக்கள் (மௌலானா அவர்களின் அபிப்பிராயத்துக்கேற்ப) தமிழ்பாஷையில் ஓதப்படவேண்டும். இன்றேல் நம்மவருக்கும், நம் குழந்தைகளுக்கும் அரபிபாஷையைக் கற்றுக் கொடுப்பது உலமாக்களின் கடமை" என்று என் பிரசங்கத்தில் எடுத்து காட்டியுள்ளேன்.

2

உலமாக்களுள் சிலர் குத்பாக்களை மொழி பெயர்த்தோதலாமென்றும், வேறு சிலர் மொழிபெயர்ப்பது மக்ரூஹ் என்றும் கூறுகின்றனர். ஆனால், இவ்வபிப்பிராய பேதத்தை ஒழிக்க உலமாக்களில் எவரும் வேலை செய்யக்காணோம். பழையவழக்கப்படி எழுதி யச்சிடப்பட்ட குத்பாக்களை ஜும்ஆ, ஈத் முதலிய தினங்களில் ஓதப்படுவதால், முஸ்லிம்கள் நன்மையை அடையக் கூடவில்லை என்று கூறி, அம்முறையை திருத்தியமைக்க வேண்டுமென்று "கிலாபத்" மகாநாடுகள் பலதீர்மானங்களை நிறைவேற்றி யிருக்கின்றன. துருக்கி தேசத்தில் துருக்கிப் பாஷையில் குத்பா ஓதப்பட்டு வருவதை சிலாகிக்க இந்நாடு இஷ்டப்படாவிடினும், உலமாக்களின் கட்டளைக்குட்பட்டு ஒவ்வொரு காரியத்தையும் செவ்வையாய் நடத்திவரும் ஆப்கான் அமீர் அமானுல்லாகான் (கல்லதல்லாஹு முல்கஹு) அவர்கள் குத்பாவை அத்தேசப் பாஷையில் ஓதிவருவதை நாம் கவனிக்காமலிருக்க முடியாது. நாகபூர் காங்கிரஸின் போது நடைபெற்ற கிலாபத் மகாநாட்டிற்கு, இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களே அக்கிராசனராக விருந்தார்கள். அவ்வமயம் இரண்டு ஜும்ஆக்களில் குத்பா ஓதினார்கள். (அக்குத்பாக்களைச் செவியுற்றவருள் நானுமொருவனென்பதைக் குறிப்பிட சந்தோஷமுறுகிறேன்.) அவைகளை

அரபிபாஷையில் ஆரம்பித்து, பின்னர் உருது பாஷையில் அதிமுக்கியமான விஷயங்களே யெடுத்துக் கூறினர்கள். மௌலானா அவர்கள் மிம்பரில் நின்றுகொண்டு, இரண்டு ஜும் ஆக்களிலும் உருதுபாஷையில் ஓதிய குத்பாக்களே, கௌரவம் வாய்ந்த நூற்றுக்கணக்கான உலமாக்கள் செவியுற்று மகிழ்ச்சி யடைந்தார்களேயன்றி எவரும் ஆக்ஷேபிக்கவில்லே. ஆனால், மௌலானா அவர்கள் குத்பாவை ஓதிவரும் பான்மைக்கும், குத்பாவைத் தர்ஜுமாச் செய்யவேண்டு மென்று கூறப்படுவதற்குமிடையிலுள்ள வித்தியாசத்தை நாம் கவனிக்க வேண்டும். அரபிபாஷையில் எழுதப்பட்டுள்ள குத்பாக்களே வாசித்துக் காட்டிப் பிறகு, கேட்போரின் பாஷையில் மொழி பெயர்க்க வேண்டுமென்று கூறுவது போலன்றி, மௌலானா அவர்கள் " ஹம்து, ஸலவாத்து" க்குப்பின் தேசம், சமூகம் ஆகியவைகளின் நன்மைக்கும், அவசியத்திற்குமேற்ற பிரசங்கத்தைச் செய்வதற்கு வேண்டிய பீடிகையாயுள்ள குர்ஆன் ஆயத்தையும், அவ்வாயத்தின் விருத்துரையாக விருக்கக்கூடிய ஹதீதையும் அரபியில் ஓதிவிட்டுப்பின்னர், அவைகளின் வியாக்கியானத்திலேயே முஸ்லிம் சமூகத்திற்கு அறிவுறுத்த வேண்டிய எல்லாவிஷயங்களேயும் விளக்கிக் காட்டுகிறார்கள்.

3

நம்சகோதரப் பத்திரிகையாகிய தாஜுல் இஸ்லாமின் ஆசிரியர் ஜனப் மௌல்வி நைனர் முஹம்மது சாஹிப் (பாக்கவி) அவர்கள் குத்பாக்கள் ஓதப்படும் முறையில் சீர்திருத்தத்தைக் கோரி வரைந்துள்ள வியாசத்தை நாம் பாராட்டுவதோடு, ஜனப் ஆசிரியரவர்கள் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களின் அபிப்பிராயத்தை ஒத்துக்கொள்வார்களென்று நம்புகிறோம். மேலும் "ஜும்ஆ" ஈத் ஆகிய குத்பாக்கள் மூலமாய் நம் சமூகம் முன்னேற்ற மடையவேண்டுமாயின் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் கூறும் யோசனைக்கேற்ப "மஸ்ஜித்களில் குத்பா ஓதுவதற்கென்றே இமாம்களேப் பயற்சி செய்வதற்கோரு மதரஸாவேண்டும். ஆகவே, தமிழ் நாட்டிலுள்ள மதரஸாக்களுள் ஏதேனுமொன்று இப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் காலத்தை எதிர் பார்க்கிறோம். நம்சமூக முன்னேற்றத்திற் கவசியமான இக்காரியத்தை, ராஜகிரி ஜனப் ஹாஜி ரூ. இ. முஹம்மது காசிம் ஜே.பி. சென்னே ஜனப் ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் ஆகியவர்கள் கவனிப்பார்களா?

4

எழுதி வைக்கப்பட்டிருக்கும் அரபி குத்பாக்களேயும், இந்நாளில் நன்மையைப் பயக்கத்தகாத உர்துபாஷைக் குத்பாக்களேயும்

மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் மறுத்துக்கொண்டிருப்பது இரகசியமன்று.

ஆனால், மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களை "இவ்வுலகில் இஸ்லாம் மார்க்க உண்மைகளைச் செவ்வனே கற்றுங் கேட்டுந் தெளிந்து, கௌரவமடைந்திருப்பவர்கள்" என்று கூறிப்போற்றும் ஜனாப் பா. தாவுதுஷா சாஹிப் அவர்கள், மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் குத்பாக்கள் சம்பந்தமாகக் கொண்டுள்ள நோக்கத்திற்குட்பட்டு வேலை செய்வதாகத் தெரியவில்லை. (ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடைந்து விட்டதாகக் கூறுவோரை வழிகேடரென்றும், மௌலவி முஹம்மத் அலீ எம். ஏ. அவர்களால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கும் குர்ஆன் மொழிபெயர்ப்பில் பல பிசகுகளிருக்கின்றனவென்றும், அவைகள் திருத்தப்பட வேண்டுமென்றும் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் கூறுவதை ஜனாப் தாவுதுஷா சாஹிப் அவர்கட்கு ஞாபகப்படுத்துகிறோம்.)

"இப்பொழுது தர்ஜுமா செய்யப்பட்டிருக்கும் இப்னு நபாத்தா குத்பாவின் தமிழ் மொழிபெயர்ப்பு பாமர ஜனங்கட்கு விளங்குவது அரிதினுமரிதே. இதனால் அத்தியாவசியமான வார உபன்னியாசத்தால் சிறிதும் பயனில்லாது போகிறது" என்று தாருல் இஸ்லாமுக்கு 1922-ல் ஒருவர் வரைந்துள்ள கடிதத்தின் இறுதிக்குறிப்பில் "இன்றும் குத்பா கிதாபு தமிழில் எழுதி, அதைக்கொண்டு கத்தீப் மார்கள் காலங்கழிப்பதென்றால், அதனாலும் அதிகமான பயன்விளையமாட்டாது. காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப அவ்வப்பொழுது ஆஜராகும் ஜனங்களின் தன்மைக்கு ஒத்தவாறு ஜுமுஆவில் பிரசங்கம் புரிய வேண்டும். யாரோவொருவர் 64 குத்பாவை, எப்பொழுதோ எழுதி விட்டால், அவற்றையே வருஷமுழுதும் திரும்பத்திரும்ப உலக முடியுமட்டும் ஓதினால் யாருக்கென்ன பயன்? சமயத்திற்கேற்றவாறு பிரயோசனமான பிரசங்கம் புரிதல் வேண்டும்" என்று எழுதியிருக்கும் ஜனாப் பா. தாவுதுஷா சாஹிப் அவர்களிடம் மதிப்புரைக்காக ஜனாப் மௌலவி மு. முஹம்மத் யாகூப் சாஹிப் (பாக்கவி) அவர்கள் தங்களின் "குத்பா மஹோபந்நியாசம்" என்னும் (இப்னு நபாத்தாவின் மொழிபெயர்ப்பு) நூலை யனுப்பியதுண்மையாயின் நாம் ஆச்சரியப்பட இடமிருக்கவியலாது.

முன்னுக்குப்பின் முரணாக எழுதும் இயல்புள்ள ஜனாப் பா. தாவுதுஷா சாஹிப் அவர்கள் 1922-வருடம் தாருல் இஸ்லாமில் வரைந்துள்ள குறிப்புக்கு விரோதமாக "குத்பா மஹோபந்நியாசத்திற்கு மதிப்புரை" எழுதியதையொட்டி எவரும் ஆச்சரியப்படமாட்டார்கள்.

அப்துல் மஜீத்.

ஜும்ஆவின் குத்பா.

(மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது)

("தொத்தாவலி" என்னும் கிராமத்தின் தலைவரான மௌலவி முஹம்மது யூனுஸ் சாஹிப் அவர்கள் சில (குத்பா) பிரசங்கங்களை யியற்றி உலமாக்களின் பார்வைக்கனுப்பியிருந்த போழ்து, மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் பின்வருமாறு வரைந்திருக்கிறார்கள்.)

மௌலவி (முஹம்மது யூனுஸ்) சாஹிப் அவர்கள் ஜும்ஆவில் ஓதப்படுவதற்காக சில குத்பாக்களை இயற்றியிருக்கின்றார்கள். காலநிலைமைக் கேற்றவாறு நன்மை பயக்கத்தக்க குத்பாக்கள் ஓதப்படுவதற்குரிய வழியில், உலமாக்களின் கவனத்தைத்திருப்ப வேண்டுமென்று, மௌலவி சாஹிப் அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. ஆகவே, இச்சிறு நூலைக் கண்ணுற்றதும் மஸ்ஜிதுகளில் ஓதப்படும் ஜும்ஆ, ஈத் ஆகிய குத்பாக்களைச் சார்ந்த மூலப்பிரச்னை யானது, என் ஞாபகத்திற்கெட்டிற்று. மேலும், குத்பாக்களின் உண் மையை அறிவுறுத்துவதற்கான விஷயங்களை வெளியிட வேண்டுமென் பது, என் நீண்ட காலயெண்ணமாகும். ஆதலின், இன்ஷா அல்லா ஹுத ஆலா (சமயம் வாய்க்கும்போழ்தெல்லாம்) எழுதுவேன்.

ஜும்ஆவன்று ஏற்படும் ஜனங்களின் கூட்டுறவும், அவ்வமயம் (குத்பா) பிரசங்கஞ் செய்யப்பட வேண்டுமென்னும் கட்டளையும், முஸ்லிம்களின் இம்மை மறுமைக்குரிய அபாரமான நன்மைக்கு இன் றியமையாத சாதனங்களாகும். வாரமொருமுறை அவர்களின் நிலைமை, அவசியம் ஆகியவைகளுக்கேற்றவாறு ஜனங்களுக் கறி வுறுத்தி, நேரான வழியைக் காட்டி அவர்களை நன்மையில் அழைப் பதோடு, நல்லதையேவி, கெடுதியை யகற்றத்தக்க அழிவில்லா சாதனமொன்று சதா இருந்து வரவேண்டு மென்பதும் ஜும்ஆவின் கூட்டுறவைச் சார்ந்த லக்ஷியமாகும்.

ஜனங்களின் முன்னேற்றத்தைக் கருதி நடைபெறும் மற்ற பிர சங்கங்களைப் போலவே, உண்மையில் குத்பாவும் ஒரு பிரசங்கமென் பதை மறுக்க முடியுமா? நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் காலத்திலும், குலபாயெ ராஷிதீன்கள் முதலிய ஸஹா பாக்களின் காலத்திலும் குத்பாக்கள் பிரசங்கங்களாகவே யிருந்தன. மேலும், இதற்குபின்னர் ஏற்பட்ட அரபி ஆட்சிகளில் எல்லா கலீ

பாக்களும், சுல்தான்களும் மஸ்ஜிதின் மிம்பர்களில் நின்று பிரசங்கம் புரிந்த செய்திகளை சரித்திரங்களிற் இன்றும் கண்ணுறலாம். குத்பாக்களின் உண்மையை யுணர வேண்டுமாயின், "ஸஹாஹ்" என்னும் கிரந்தங்களில் ஜும்ஆ, குத்பா ஆகியவைகளைச் சார்ந்த அத்தியாயங்களிற் வரையப்பட்டிருக்கும் ஹதீதுகளை வாசிக்க வேண்டும்.

இன்றைய நம் இழிய நிலைமையானது நம் ஊழ் வினையின் அடிப்படையல்ல. ஆனால், இக் கேடுகள் நம் ஊழ்வினையால் ஏற்பட்ட பலாபலனாகும். மார்க்க சம்பந்தமான நம் நடவடிக்கைகளை நாம் பாழ் பண்ணியதே நம்மை இவ்விழிய நிலைமைக்குக் கொண்டுவந்த கருவிகளும் நம்ஊழ்வினையின் அடிப்படையுமாகும். ஏதேச்சாதிகார ஆட்சிகள் ஸ்தாபனம் பெற்றதும், அஜமி சுல்தான்களின் பெருக்கமும், குலபாயெ ராஷிதீன்களுடைய சுன்னத்தின் மறைவும், அறியாமை, மறைதி, தூக்கம் ஆகியவைகளின் வெள்ளமும் இஸ்லாமின் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு வெளித் தோற்றமான ஆடையைக் கொடுத்து, அதன் உண்மையான ஜீவனைக் கைப்பற்றிக் கொண்டன. ஜும்ஆ, ஈத், நிகாஹ் ஆகிய வைகளின் குத்பாக்களும் மேற் கூறியது போல் வெறும் உருவத்தை மட்டும் கொண்டிருக்கின்றன.

அரபி பாஷையில் வரைந்து அச்சிடப்பட்டதும், கடை வீதியிற் விலைக்கு வாங்கப்பட்டதுமான கிதாபிலிருந்து "அல்ப் லைலா" வைப் போல் ஒன்றை எவ்வாறேனும் தப்புந் தவறுமாய் வாசித்துச் செவியுறப் பண்ணுவதையே இன்று 'குத்பா' வென்னும் பதத்திற்குரிய பொருளெனக் கருதப் படுகின்றது. உச்சரிக்கும் போழ்து அரபிபாஷையின் தொனியை யுண்டு பண்ணும் பொருட்டு, ஒவ்வொரு பதத்தையும் கடினமாக்கி, கொடும் சப்தமாய் மொழிவதை சிரேஷ்டமெனக் கருதுகின்றனர் போலும். சிலர் குர்ஆன் ஷரீபிலிருந்து பெற்றுக் கொண்ட "கிரஅத்"தையும் தாங்களோதும் குத்பாவில் சேர்த்து விடுகின்றனர். ஒவ்வொரு பதத்தின் இறுதியக்ஷரத்தை மூச்சை யொடுக்கி, இழுத்து இராகமாய் ஓதுவோரை பெரிய "காரி" என்றும் சிலர் நம்பக்கூடும்.

அநேகமாய் குத்பா ஓதும் துரதிர்ஷ்டரும் கூட "தான்" இன்ன விஷயத்தை யோதுகிறேன் என்பதை யறியார். தான் ஓதுவது "அல்ப் லைலா" விலுள்ள ஓர் இரவின்கதையா அல்லது "கல்யூபி" யின் சரித்திரமா என்பதும் அவருக்குத் தெரியாது. இந்நிலைமையில் நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மிம்பரில் நின்றுகொண்டு, உம்மத்துகளின் நேர்வழிக்குரிய பரிசுத்தமான அரும் காரியத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பைத்

தாங்கள் ஏற்றுக் கொண்டிருப்பதை, இத்தகைய பேஷ்இமாம்கள் எங்கனம் உணரக்கூடும்? உண்மையிவ்வாறிருக்கும் போழ்து, குத்பாவைச் செவியுறுவோரின் துரதிர்ஷ்டத்தைப் பற்றியுங் கூற வேண்டுமோ? சிலர் தூங்கி விழுவதும், சிலர் தங்கள் நண்பர்களிடம் கடைவீதியின் விலைப்பர்வத்தை வினவுவதும் ஆச்சரியமா?

(குத்பா) பிரசங்கத்தின் மூல்மாய் ஒரு நாட்டுப்புற சமூகத்தை ரோமாபுரி, பர்ஷியா ஆகிய தேசங்களின் நாகரீகத்திற் கதிபதியாகச் செய்துவிட்ட, நம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கொண்டுவந்த அபாரமான பெரும் மார்க்கத்தைச் சார்ந்த ஓர் அரிய அனுஷ்டானத்தை யலக்ஷியஞ்செய்து, இழிவுபண்ணும் தோரணையில் இன்று ஜும்ஆவின் (குத்பா) பிரசங்கம் நடைபெறுகிறது. ("அவர்கள்மீது அல்லாஹுதஆலா அநியாயஞ் செய்யவில்லை. ஆனால், அவர்களே தங்களுக்கு அநியாயஞ்செய்து கொண்டனர்" (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

பனீ இஸ்ராயீல்களின் அழிவு, கேடு ஆகியவைகளையொட்டி ஹஜ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விசனமுற்ற போழ்து, ஷரீஅத்தே மூஸவீயின் கட்டளை, அனுஷ்டானம் ஆகியவைகள் ஒதுக்கித் தள்ளப்பட்டிருந்தவாறே, இன்று நீங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஷரீஅத்தை இழிவு பண்ணி விட்டீர்களென்பதை நிச்சயித்துக் கொள்ளுங்கள்.

பனீ இஸ்ராயீல்களின் "புரூஸியூன்" களும், "ஸித்தூகியூன்" களும் பெரும் கைகளையுடைய நீண்ட அங்கிகளை யணிந்துகொண்டும், ஒவ்வொரு நேரமும் துஆக்களை ஓதிக்கொண்டும், அச்சமூட்டத்தக்க பெரும் பெரும் தஸ்பீஹ் (ஜெபமாலை) களை கரத்தில் பிடித்துக்கொண்டுமிருப்பார்கள். ஆனால், அவர்கள் மதக்கட்டளைகளைக் கெடுத்து, மதத்தின் நற்காரியங்களை யுபயோகமற்றனவாகச் செய்துவிட்டதை முன்னிட்டு, மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அழுதுகொண்டிருந்த நிலைமையில், நம் ஆலிம்களையும், ஸூபியாக்களையும் நினைத்து நாமும் விசனங்காக்கவேண்டும். ஏனெனின், அப்புரூஸியூன்களும், ஸித்தூகியூன்களும் நடந்துகொண்டது போலவே, இன்றைய உலமாக்களும் மார்க்கக் கிரியைகளை நிறைவேற்றுவதாகத் தோன்றுகிறது. ஆனால், இவர்கள் உண்மையான ஜீவனைவிட்டு வெறுமையாகிவிட்டனர்.

எழுதிவைக்கப் பட்டிருக்கும் குத்பாவை வாசித்துக் காட்டுவதை ஆரம்ப முதற் கொண்டே, ஆக்ஷேபிக்கும் கொடிய வெதிரியாக விருந்து வருகிறேன். எழுதப்பட்ட குத்பாவை வாசிப்பது ஒரு (பித்அத்)

நூதனச் செய்கை யாகும். உத்தமரும், முன்னோருமான ஸலபஸ் ஸாலிஹீன்களின் நடவடிக்கைகளுள் எதுவும் இந்நூதனச் செய்கையை யாதரிக்கக் கூடிய சாக்ஷியமாகவில்லை. மேலும், இயலாமையை முன்னிட்டு மார்க்கம் இந்நூதனச் செய்கையை அனுமதிக்கக் கூடிய தாயு மில்லை.

'குத்பா' வென்பது ஓர் உபதேசமாகும். ஆதலின், ஜும்ஆவன்று குத்பா ஓதுவதற்கென்றே பயிர்ச்சி பெற்றுத் தேர்ந்த (கதீப்) பிரசங்கிகள் மஸ்ஜித்களிலிருந்து வரவேண்டும். இவர்கள் பொதுவாகவே மற்றபிரசங்கங்களைப் போல் ஜும்ஆவிலும் பிரசங்கம் புரியவேண்டும். இச்சேவையில் ஈடுபடக் கருதும் கதீபுகள், பொதுமக்களின் தற்கால நிலைமையை நன்கறிந்திருக்க வேண்டும். ஜும் ஆவின் (குத்பா) பிரசங்கஞ் செய்யும் கதீபுகள் இன்று நம்மைப் பீடித்திருக்கும் நோயைப் போக்கத்தக்க சிகிச்சைகளை நமக்கறிவுறுத்த வேண்டுமேயன்றி, ஐந்து நூற்றாண்டுகளுக்குமுன் பீடித்திருந்த வியாதிக்குச் செய்ய வேண்டியதாக விருந்த சிகிச்சையை யறிவிப்பதால் யாது பயன்?

இன்று வழக்கமாக ஓதப்பட்டுவரும் எல்லா குத்பாக்களையும் நான் வாசித்திருக்கிறேன். அவைகள் எழுதப்பட்ட காலத்திலுங் கூட நன்மைபயக் கத்தக்கனவாக விராத நிலைமையில், இன்று அவைகள் எப்பயனையளிக்கக் கூடும்? ஜும் ஆவையும், ஈதையும் சார்ந்தசில சட்டதிட்டங்களை யறிவிப்பதும், ஒருநாள் மரணமடைய மேண்டும், ஆதலின் பயந்து கொள்ளுங்களென்றும், மரணத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்களென்றும் அறிவிப்பதே குத்பாவின் நோக்கமென்று கூறியது யாரோ? சந்தேகமின்றி மரணத்தை நினைப்பதைக் காட்டினும், மானிடருக்கு வேறு நல்ல உபதேசமில்லை என்பது உண்மையே. ஆனால், ஜனங்களுக்கு அச்சத்தையுண்டுபண்ண இவ்வார்த்தை மட்டும் போதியதன்று. ஆகவே, மரணத்தை ஞாபகமூட்டுவதோடு, இம்மை, மறுமை ஆகிய இம்மையிலும் நன்மையை அடையத்தக்க வாழ்க்கைக் குரிய வழியையும் காட்டவேண்டும்.

குத்பாவைபற்றி பிரஸ்தாபிக்கும் போழ்து, அது எந்த பாஷையாகவிருக்க வேண்டும்மென்பதேயின்று அதிபெரும் பிரச்னையாகவிருக்கிறது. ஆதலின், குத்பாவை அரபிபாஷையில் ஆரம்பித்து "துஆயெ மாஸூரா" வளவு சுருக்கமாக ஓதிப்பின்னர், கேட்போரின் பாஷையிலேயே உபதேசஞ்செய்யவேண்டுவது அவசியமாகும். இன்றேல், அநேகமாய் ஓதுகிறவரும் அறியாத அரபி பாஷையில் குத்பாவை ஓதுவதால் கிடைக்கும் நன்மைகளின்னவென்றறியக் கூடவில்லை.

குத்பா ஓதவேண்டுமென்னும் கட்டளையினுள் ஷரீஅத்தா னது எத்தகைய நன்னோக்கத்தைக் கொண்டிருக்கிற தென்பதை யுணரவேண்டும். ஜும்ஆவின் குத்பாகளுக்கு "பரலு" தொழுகை யின் அந்தஸ்தை யளித்து, அவைகளைச் செவியுறுவது கடமையென இஸ்லாம் தீர்மானித்திருக்கிறது. ஜும்ஆவின் இரண்டு குத்பாக்க ளையும் செவியுறுவது வாஜிபென்று, இமாம் அபூஹனீபா ரஹ்மதுல் லாஹி அலைஹி அவர்களும், முதலாவது குத்பாவை மட்டும் செவியு றுவது வாஜிபென்று இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர் களும் கட்டளையிடுகின்றனர். குத்பாக்களைச் செவியுறுவது வாஜி பாக விருப்பதோடு குத்பாக்கள் ஓதப்படும்போழ்து தொழுவதும் ஜாயிஸ் இல்லை. (ஆகாது.)

வணக்கத்தைப் போலவே உபதேசம், நல்லறிவு ஆகியவைகளை யும் ஜனங்கள் செவியுறவேண்டுமென்பதே இவ்வுத்தரவைச் சார்ந்த கருத்தாக விருக்கும் நிலைமையில், குத்பாக்களின் மூலமாய்ச் செய்யப் படும் உபதேசம், தொழுகையில் ஈடுபடுவதைக் காட்டினும் அவசிய மானதாயும், விசேஷ நன்மைபயக்கத் தக்கதாயுமிருக்கவேண்டும். ஆனால், ஜனங்கள் உறங்கிவிழும்வண்ணம் இன்று திக்கித் திக்கி ஓதப் படும் குத்பாவையா உபதேசமென்றும், அதைக் கேட்பது பரலென் றும், அச்சந்தர்ப்பத்தில் தொழுவது கூடாதென்றும் மார்க்கம் கூறிற்று ? இன்றைய உலமாக்களுங்கூட மேற்கூறிய விசனகரமான முறையைஅனுஷ்டித்துத் திருப்தியடைவதைக் கண்ணுறும்போழ்து, மார்க்கம் அறிவு ஆகியவைகளின் க்ஷீணதசையை முன்னிட்டு வருந்த வேண்டுமல்லவா ?

மஸ்ஜிதுகளைச் சார்ந்த "இமாமத்" தென்னும், பொருப்பானது, இன்று அநேகமாய் (ஜாஹில்) மடையர்களின் ஸ்வாதீனத்திலிருந்து வருவதே பெரும் ஊழ்வினையாகும். மேலும், இவ்வுத்தியோகம் ஜீவ னோபாயத்திற்குரிய தொழிலாக வேற்பட்டுவிட்டது. உண்மையிவ்வா றிருக்கும்போழ்து, குத்பாவைச் சார்ந்த எல்லா நிபந்தனைகளுக்கு முட்பட்டு, தங்குதடையின்றி (குத்பா) பிரசங்கம் செய்யத்தக்க ஆற் றலை இத்தகையோர் பெறுவதெங்ஙனம் ?

மத சம்பந்தமான நற்போதனை மட்டுமின்றி, சென்ற (ஜும்ஆ) வெள்ளிக் கிழமைக்குப் பின்னர், உலகில் நிகழ்ந்துள்ள புதிய செய்தி களும், அதையொட்டி முஸ்லிம்களுக்கு அறிவுறுத்த வேண்டிய அவ சியமான உரைகளும் அடங்கி யிருப்பதற்கே, ஜும்ஆவின் குத்பா வென்று இஸ்லாம் விளக்குகின்றது. ஆகவே, பால்கன்ஸ், திருபோலி விஷயங்களும் அவ்வக்காலத்து ஜும்ஆவின் குத்பாக்களில் சம்

பந்தபட்டிருக்க வேண்டுவது அவசியமாகும். கான்பூர் பள்ளிவாசல் சம்பந்தமான துக்கக் காரியமானது நிகழ்ந்த பிறகு, ஒவ்வொரு மஸ்ஜிதிலும் ஓதப்பட்ட ஜும்ஆவின் குத்பாக்களில் கான்பூர் பள்ளிவாசல் செய்திகளும் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கவேண்டும். முஸ்லிம்களின் கல்வி, ராஜீய வாழ்க்கை, ஒழுக்கம், அனுஷ்டானம், தற்கால அவசியம் ஆகியவைகள் மஸ்ஜிதுகளில் நடைபெறும் குத்பாக்களின் மூலம் சீர்திருந்தாது போயின், அவைகளைச் சார்ந்த சீர்திருத்தத்திற்குரிய மார்க்கத்தை முஸ்லிம்கள் (Young Men Christian's Preaching Hall) ஒய். எம். ஸி. பிரீச்சிங் ஹாலில் தேட வேண்டுமா? ஜும்ஆக்களில் ஓத வேண்டு மென்று இஸ்லாம் விதித்திருக்கின்ற குத்பாக்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடையவும், குலபாயேராஷிதீன்களுடையவும் காலமுதற்கொண்டு பல்லாண்டுகளாக விருந்துவந்த நன்முறையை உண்மையாகவே பின்பற்றி ஓதப்பட்டு வருமாயின், அஞ்சுமன்களும் லோக்கல் கமிட்டிகளும், கான்பரன்சுகளும், முஸ்லிம் லீகும், அதன் கிளை ஸ்தாபனங்களும் இன்று நமக்கவசியமானவையாக விருக்க முடியுமா? இன்றைய பெரியார்களின் காரியங்களுக்கும், என் ஆராய்ச்சிக்கு மிடையில் அடிப் படையான வேற்றுமை யொன்றுண்டு. அஃதாவது:— அப்பெரியார்கள் நூதன வழியைக் கண்டு பிடிக்க முயலுகின்றனர். ஆனால் பூர்வவழியையே புதிப்பித்து, அதற்குப் புத்துயிரளிக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். இவ்விஷயத்தை யொட்டி யேற்கனவேயும் ஒரு முறை கூறியுள்ளேன். குத்பாக்களைச் சார்ந்த இவ்விவாதத்தையும் என் வார்த்தைக்கோர் உதாரணமாக வைத்துக் கொள்ளலாம்.

குத்பாக்களும், அவைகள் ஓதப் படவேண்டிய முறைகளும் சீர் திருத்தியமைக்கப்பட வேண்டுமாயின், உண்மையான உலமாக்களின் விழிப்பும், அரியகடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்னும் உணர்ச்சியுமின்றி முடியாது. மேலும், இந்தியாவின் சகல மஸ்ஜிதுகளிலுமுள்ள இமாம்களின் நிலைமையை விசாரித்தறியும் பொருட்டு, ஒழுங்குமுறைக்குட்பட்ட ஒரு கமிட்டியும், இமாம்களையும், கதீப்களையும் பயிற்சி செய்விப்பதற்குரிய கல்வி ஸ்தாபனமும், ஒரு பிரத்தியேகக் கல்வித்திட்டமும் இன்றியமையாதவையாகும்.

கான்பூர் பள்ளிவாசலைச் சார்ந்த துக்கசம்பவத்தை முன்னிட்டு, சேகரிக்கப்பட்டிருக்கும் நிதியை விநியோகஞ்செய்வதற்கான வழியைக்கண்டுபிடிக்கப் பலர் முயன்று வருகின்றனர். கான்பூர் பள்ளிவாசலை முன்னிட்டு உயிர்துறந்த ஷுஹதாக்களைச் சார்ந்த அனாதை

களுக்கும், வாரிஸ்களுக்கும் வேண்டிய அவசியமான சகாயத்தைச் செய்துவிட்டு, மிச்சப்படும் நிதியிலிருந்து கான்பூரில் ஒரு மதரஸா வையேற்படுத்தி, அம்மதரஸாவில் மஸ்ஜித்களின் பேஷ் இமாம்களை யும், கதீப்களையும் பயிற்சி செய்விப்பது உசிதமென்று நான் ஒருசமயம் கருதிய துண்டு. ஏனெனின் மஸ்ஜிதுக்காகவென்று திரட்டப்பட்ட நிதியானது, மஸ்ஜித்களுக்கு ஜீவனையளிக்கும் முறையில் செலவிடுவதே நியாயமாகும்.

மௌலவி முஹம்மது யூனுஸ் சாஹிப் அவர்கள் "குத்பாத்துல் இஸ்லாம்" என்னும் நாமமிட்டு, உர்துபாஷையில் ஜும்ஆவின் சில குத்பாக்களைச் சேகரித்து உலமாக்களுக்கனுப்பி, குத்பாவின் ஓர் அரிய நூல் முற்றுப் பெறும்பொருட்டு, தமக்கு ஆலோசனைகூறவேண்டுமென்று கோரியிருக்கின்றார்கள்.

நன்மை பயக்கத்தக்க இந்நன்னோக்கத்தை நான் மிகப் பாராட்டுகிறேன். இத்தகைய உண்மையான நற்காரியங்களைச் சிந்திப்பவரும், செய்பவரும் உண்டோ? மௌலவி சாஹிப் அவர்கள் வரைந்துள்ள குத்பாக்கள் திருத்தியமைக்கப்படவேண்டியனவாக விருக்கின்றன. எழுதுவதிலும், வாசிப்பதிலும் பழய வழக்கங்களைப் பின்பற்றுவதால் கிடைக்கும் நன்மையாது? மனதைக் கவரத்தக்கதாயும், செவியுறுவோரை தன்சார்பாய் இழுக்கக்கூடியதாயுமுள்ள முறையில் குத்பாக்கள் இருந்துவரவேண்டும்.

பழைய குத்பாக்கள் கொண்டிருக்கும் கருத்தையே மௌலவி சாஹிப் அவர்கள் தங்கள் குத்பாவில் அமைத்திருக்கின்றார்கள். ஆகவே, இந்த குத்பாக்கள் சீர்திருத்தி யமைக்கப்பட்டவையென்று கூற முடியாது. மேலும், இத்தகைய குத்பாக்களின் மூலமாய் எப்பயனு மேற்படாது. முஸ்லிம்களின் இன்றைய சகல நோய்களையுமறிந்து, இஸ்லாமின் எக்கட்டளையை அலக்ஷியஞ் செய்ததால் முஸ்லிம்கள் இம்மை, மறுமையைச் சார்ந்த நற்பாக்கியங்களை யிழந்துவிட்டனரோ, அக்கட்டளையை குத்பாக்களின் மூலம் முஸ்லிம்களுக்கு எடுத்துக் காட்டி வற்புறுத்த வேண்டும்.

ஹஜ்ஜும், முஸ்லிம் மன்னர்களும்.

(மக்கமா நகரிலிருக்கும் ஒரு மாணவர் எழுதியது.)

(145-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸுலைமா னிப்னு அப்துல் மலிக்

ஹிஜ்ரீ 97-வது ஆண்டில் உமவி கலீபாவான ஸுலைமானிப்னு அப்துல் மலிக் அவர்கள் மக்கமா நகரையடைந்து ஹஜ்ஜு செய்தார்கள். ஏராளமான வஸ்துகளை கலீபா அவர்கள் தன்னோடு கொண்டு வந்திருந்தார்கள். கலீபா அவர்களின் உடுப்புகள் மட்டும் 700 ஒட்டகங்களில் ஏற்றப்பட்டிருந்தன. கலீபா அவர்களோடு ஹஜ்ரத் உமரிப்னு அப்துல் அஜீஸ் அவர்களும் வந்திருந்தார்கள். ஹாஜிகளின் கூட்டம் அபரிமிதமாக விருந்ததைக் கண்டு, கலீபா அவர்கள் ஹஜ்ரத் உமரிப்னு அப்துல் அஜீஸ் அவர்களை நோக்கி, "ஜனத்திரளைப் பார்த்தீர்களா? இதன் எண்ணிக்கையை அல்லாஹுதஆலா மட்டுமே அறிவான்" என்று கூறியதும், ஹஜ்ரத் அவர்கள் "இவர்களெல்லோரும் இன்று தங்களின் பிரஜைகளாக விருக்கின்றனர். ஆனால், கூலி கொடுக்கும் நாளில் இவர்கள் உங்கள் பகைவர்களாக விருப்பார்கள்" என்று அறிவித்தார்கள். ஸுலைமானிப்னு அப்துல்மலிக் அவர்கள் இவ்வார்த்தையைச் செவியுற்று, மிதமிஞ்சி யழுதவர்களாய் "அல்லாஹுத ஆலா உதவி செய்வானாக" வென்று மொழிந்தார்கள். ஸுலைமானிப்னு அப்துல் மலிக் அவர்கள் பெருந் தீனிக்காரர்களாக விருந்தார்கள். இவர்கள் மதீனா முனௌவராவுக்குப் போய்ச் சேர்ந்ததும், அந்நகரவாசிகளுக்கொரு விருந்தளித்தார்கள். அவ்வமயம் 84 தும்பை ஆடுகள் அறுத்து சமைக்கப்பட்டன. விருந்தினர்கள் விருந்துண்ண வருமுன்னரே, 84 ஆடுகளின் தலைகளையும், அவைகளின் கிட்னிகளையும் சாப்பிட்டுவிட்டு, மற்றவர்களோடு சேர்ந்து நன்றாய்ச் சாப்பிட்டார்கள். தாயிபிலும் இவ்வண்ணமே ஒரு சம்பவம் நிகழ்ந்தது. "இப்னு அபீஸுபைர் ஸக்பி" என்பவர் கலீபா அவர்களுக்கு விருந்தளித்தார்கள். இவ்விருந்தில் கலீபா அவர்கள் சாப்பிட்டவைகளாவன:—தும்பை ஆடு ஒன்று, கோழி ஆறு, ரொட்டி இருபது, (ஸுஐஸ்தர்) ஒரு கூடை மாதுளைப் பழங்கள்.

ஹிஷாமிப்னு அப்துல் மலிக்

ஹிஜ்ரீ 106-ல் பனீ உமையாவைச் சார்ந்த கலீபாவாகிய ஹிஷாமிப்னு அப்துல் மலிக் அவர்கள் ஹஜ்ஜு செய்தார்கள். கலீபா அவர்கள் அல்லாமா அபுஸ்ஸுஹ்ரீத் அவர்களிடம் ஹஜ்ஜின் சட்ட திட்டங்களை எழுதிவாங்கிக் கொண்டார்கள். ஒருநாள் கலீபா அவர்கள் கஃபாவுக்குட்சென்ற போழ்து, அவ்விடத்தில் ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பௌத்திரராகிய "ஸாலிம்" ரலியல்லாஹு அன்ஹு அவர்களிருப்பதைக் கண்டு, கலீபா அவர்கள் ஹஜ்ரத் ஸாலிமை நோக்கி உங்களுக் கேதேனும் வேண்டுமாயின் அறிவிக்க வேண்டும்" என்று கூறவே, ஹஜ்ரத் ஸாலிம் அவர்கள் "அல்லாஹுதஆலாவின் வீட்டில், அல்லாஹுதஆலாவினிடத்திலன்றி, மற்றவர்களிடம் கேட்பது வெட்ககரமான காரியமாகும்" என்று விடையளித்தார்கள். இருவரும் கஃபாவிலிருந்து வெளியேறிய பின்னர், கலீபா அவர்கள் ஹஜ்ரத் ஸாலிம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "கஃபாவை விட்டு இதோ வெளிக்கிளம்பி விட்டோம். ஆதலின், வேண்டும் வஸ்துவைக் கேளுங்கள்" என்று பகர்ந்ததும், ஹஜ்ரத் அவர்கள் "தங்களிடம் நான் எவ்வஸ்துவைக் கேட்கத்தகும்? துன்யாவை (இம்மையை)ச் சார்ந்த வஸ்துவைக் கேட்கவேண்டுமா? அல்லது ஆகிரத்தை (மறுமையை)ச் சார்ந்த வஸ்துவைக் கேட்க வேண்டுமா?" என்று வினவினார்கள். இதற்கு "துன்யாவைச் சார்ந்த வஸ்துவைக் கேட்கலாம்" என்று கலீபா அவர்கள் அறிவித்ததும், ஹஜ்ரத் ஸாலிம் அவர்கள் "உண்மையாகவே துன்யாவுக்குச் சொந்தக்காரனான அல்லாஹுதஆலாவின் சமுகத்திலுங்கூட நான் அதைக்கேட்காதிருந்து வரும் நிலைமையில், தங்களுக்குப் பாத்தியதை யில்லாத துன்யாவின் பொருளை நான் தங்களிடம் கேட்பதெங்ஙனம்?" என்று அதி கம்பீரமாகக் கூறினார்கள்.

இதே ஹிஷாமிப்னு அப்துல் மலிக் அவர்கள் கிலாபத்துப் பதவியை ஏற்றுக் கொள்ளுமுன் இளவரசராக விருந்த காலத்தில் ஹஜ்ஜை நிறைவேற்றுதற்காக திருமக்கமா நகரத்திற்கு வந்திருந்தார்கள். இளவரசர் கஃபாவைத் தவாப் செய்த போழ்து, ஜனநெருக்கம் அதிகமிருந்ததால், "ஹஜருல் அஸ்வதை" முத்தமிட முடியாமல் தவாபு செய்தபின்னர், ஒரு மிம்பரிலிருந்து கொண்டு வேடிக்கைப் பார்க்கவாரம்பித்தார். இளவரசருக்குப் பக்கத்தில் ஷாம் தேசத்துச் சேனாதிபதிகளும் நின்று கொண்டிருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் ஸைனுல் ஆபிதீனு ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின்

செல்வப் புதல்வர், ஸைபிதினு ஹஜ்ரத் ஜைனுல் ஆபிதீன் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் கஃபாவுக்கு வந்து "தவாப்" செய்ய வாரம்பித்தார்கள். ஹஜ்ரத் அவர்கள் ஹஜருல் அஸ்வதை நெருங்கிய தும் ஜனத்திரள் விலகிவிட்டதால் ஹஜ்ரத் அவர்கள் ஹஜருல் அஸ் வதை முத்தியிட்டார்கள். ஆகவே, ஷாம் தேசத்தோர்க்கு இச்சம் பவமானது ஆச்சரியத்தையும், வியப்பையும் உண்டுபண்ணியதோடு, "நம் இளவரசரை ஹஜருல் அஸ்வதுக்குச் சமீபத்திலுங்கூட வரவிடா திருந்த ஜனங்கள், இவ்வாலிபரைக் கண்டு அளவு கடந்த மரியாதை செய்வதற்குக் காரணம் யாது?" என்று ஷாம் தேசத்தார் விசாரித் தார்கள். ஒரு ஷாமீ (ஷாம்தேசத்தவர்) இளவரசரிடம் "ஜனங்களின் இத்தகைய மரியாதைக் குரியவராக விளங்கும் வாலிபர் யார்?" என்று வினவியபோழ்து, இளவரசர் "நானறியேன்" என்று விடை பகர்ந்தார். ஷாம் தேசவாசிகளுங்கூட ஹஜ்ரத் அவர்களைக் கொண் டாட முற்பட்டு விடுவார்களெனக் கருதி "நானறியேன்" என்று இள வரசர் கூறியிருக்கலாம். அது போழ்து இளவரசருக்குச் சமீபத்தில் நின்றுகொண்டிருந்த பிரசித்திபெற்ற கவிச் சிரேஷ்டரான "பர்ஜுக்" என்பவர் "இப்பெரியாரை நான் நன்கறிவேன்" என்று கூறியதும், ஷாமீகள் பர்ஜுகை நோக்கி "கௌரவம் வாய்ந்த இப்பெரியாரை எங் களுக்கறிவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டதால், பர்ஜுக் அவர்கள் சில கவிகளின் மூலமாய் ஹஜ்ரத் இமாம் அவர்களைப் புகழ்ந் தார்கள்.

அக்கவிகளுள் சிலவற்றின் சாரமாவது:—

எப் பெரியாரின் கௌரவத்தை மக்கமா நகரின் பூமி நன்கறி யுமோ அப்பெரியார் இவரே. கஃபாவும், ஹரமைச் சார்ந்த எல்லா பாகங்களும் இப்பெரியாரை விசேஷமாகவறியும். இப்பெரியார் சிருஷ் டிப் பொருளெல்லா வற்றிற்கும், உத்தம புருஷரான மகானின் சந் ததியாகும். அல்லாஹுதஆலாவின் அச்சம், பரிசுத்தம், நல்லொழுக் கம் ஆகியவைகளில் இப்பெரியார்பிரசித்திபெற்றவராகும். எம்மகானை நேசிப்பது ஈமானின் அங்கமென்றறிவிக்கப் படுகின்றதோ அம் மகா னைச் சார்ந்த இப்பெரியாரை நேசிப்பது நற்பாக்கியத்தை யளிக்கத் தக்கதும், வெறுப்பது குப்ரில் தள்ளக் கூடியதுமாகும்.

இக்கவிகளைச் செவியுற்ற இளவரசராகிய ஹிஷாமிப்னு அப்துல் மலிக் "பர்ஜுக்கை" மக்கமா நகரைவிட்டு வெளியேற்றி, "அஸ்பான்" என்னுமிடத்தில் கைதுசெய்வித்தார். இமாம் ஜைனுல் ஆபிதீன் ரலி யல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வரலாற்றை யறிந்து, கவிச்சிரேஷ் டர் பர்ஜுக்கு பன்னீராயிரம் திரஹங்களை யினுமாக வனுப்பி,

"இவ்வமயம் என்னிடமிருந்தது பன்னீராயிரம் திரஹங்கள்தான். இத்தொகையைக் காட்டினும் அதிகமிருப்பின், பன்னீராயிரத்துக்கு மேற்பட்ட தொகையை யளித்திருப்பேன்" என்று கவிச்சிரேஷ்டருக் கறிவிக்கும்படி கட்டளையிட்டார்கள். ஹஜ்ரத் அவர்களாற் அனுப்பப் பட்ட நன்கொடையைக் கண்ணுற்ற பர்ஜூக் "ரஸூலுல்லாஹி ஸல் லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் புத்திரசிகாமணியே! எப்பொருளையு மிச்சித்துத் தங்களை யான் புகழ்வில்லை. சந்தேகமின்றி "அல்லாஹ்வையும், அவனின் ரஸூலையும் சந்தோஷப் படுத்துவ தோடு, உண்மைக் காதரவளிக்க வேண்டுமென்பதே என் நோக்க மாகும்" என்று ஹஜ்ரத் அவர்களுக்கறிவிக் கும்படிச் செய்து, தொகையைத் திருப்பினார்கள். ஆனால், ஹஜ்ரத் அவர்கள் "நாங்கள் அஹ்ல பைத்" ஆதலின் எவருக்கும் கொடுத்ததைத் திரும்பப் பெற் றுக் கொள்வது எங்களுக் கழகல்ல. அல்லாஹு தஆலா உங்களுக்கு நற்கூலி யளிப்பானாக" என்றறிவிக்குமாறு தெரிவித்து, மீண்டும் தொகையைக் கொடுத்தனுப்பினார்கள். ஆகவே, கடைசியாய் கவிச் சிரேஷ்டர் தொகையைப் பெற்றுக் கொண்டதோடு, சிறைச்சாலையி லிருந்து கொண்டே ஹிஷாமிப்னு அப்துல் மலிக்கை இழித்தும், கண் டித்தும் பல கவிகளைப்பாடினார்கள்.

வலீத் இப்னு எஜீத்

ஹிஜ்ரீ 116-வது ஆண்டில் பனீஉமையாவைச்சார்ந்த வலீத் இப்னு எஜீத் இப்னு அப்துல்மலிக் ஹஜ்ஜு செய்ய மக்கமா நகருக்கு வந்தார். நம் ஊழ்வினையின் சின்னமாகிய "வலீத்" இச்சிறப்புற்ற பிரையாணத்திலுங்கூட சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களையும், விளையாட்டுப் பொருள்களையும் விடாமல் கொண்டு வந்திருந்தார். நாய்களும் இவரோடு வந்திருந்தன. மேலும், மரம், இரும்பு ஆகிய வைகளாற் தயாரிக்கப்பட்ட குடை அல்லது கூடாரமொன்றையும் வலீத் கொண்டு வந்திருந்தார். இக்கூடாரமானது கஃபாவில் மாட்டி வெயிலை மறைத்து, அதன் நிழலில் "வலீத்" தவாப் செய்வதென் றும், மற்ற ஜனங்கள் இக்கூடாரத்திற்கு வெளியே தவாப் செய்வ தென்றும் வலீத் தீர்மானித்திருந்தார். ஆனால், இக்கூடாரம் மதீனா வுக்குக் கொண்டுவரப்பட்டதும்,ஜனங்களுக்குக் காட்டுவதற்காகவோ, அல்லது வேறு எந்நோக்கம் பற்றியோ கூடாரத்தை சேவகர்விரித்து வைத்தனர். இதைக்கண்ட மதினமா நகரவாசிகளுக்குப் பெருங் கோபமேற்பட்டு, மதீனாவின் காஜியாகிய "ஸயீதிப்னு, இப்ராஹீ மிப்னு, அப்துர் ரஹ்மானிப்னு ஔப்" அவர்களின் தலைமைக்குட்பட்டு,

மதீனமா நகரவாசிகள் கூடி கூடாரத்தைத் தீக்கிரையாக்கி, அதிலிருந்த இரும்பைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

அபூஜஃபர் மன்ஸூர் அப்பாஸீ.

ஹிஜ்ரீ 140-வது ஆண்டில் அப்பாஸீ வகுப்பைச் சார்ந்த கலீபாவாகிய அபூஜஃபர் ஹஜ்ஜு செய்ய மக்கமாநகருக்கு வந்திருந்தார்கள். கலீபா அவர்கள் "ஹீரா"வில் இஹ்ராம் கட்டிக்கொண்டார்கள். ஹரமைனைச் சார்ந்தோர்க்கு கலீபா அவர்கள் அளவற்ற தர்மங்களைச் செய்தார்கள். ஸாதாத்கள் முதலிய மகான்களுக்கு பெரும் சன்மானங்களைப் புரிந்ததோடு, ஒவ்வொரு ஷரீபுக்கும் "புஹூரி தீனர்" என்னும் நாணயங்கள் ஒவ்வொரு ஆயிரம் அளித்தார். குரைஷீ பெண்களுக்கு தங்கப் பாத்திரங்களும் விலையுயர்ந்த ஆடைகளும் வழங்கப்பட்டன. மதீனமா நகரிலிலுள்ள எவரும் கலீபா அவர்களிடம் சன்மானத்தைப் பெறாமல் தப்பவில்லை. (அது வரை) மதீனமா நகரவாசிகளுக்கு இத்தகைய இனாமளித்தவரே கிடையாது. கலீபா அவர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றிப் பிறகு, பைத்துல் முகத்தஸுக்குச் சென்று இராக் தேசத்திலுள்ள தம் தலைநகரை யடைந்தார்கள்.

ஹிஜ்ரீ 145-வது ஆண்டில் கலீபா அபூஜஃபர் மன்ஸூர் அவர்கள், மறுமுறை ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக திருமக்கமாநகருக்கு விஜயஞ் செய்தார்கள். அதுபோழ்து நிகழ்ந்த ஒரு சம்பவம் குறிப்பிடத் தக்கதாக விருக்கின்றது.

கலீபா மன்ஸூர் அவர்கள் இரவின் கடைசி பாகத்தில் "தாருந் நத்வா" என்னும் தங்களின் இருப்பிடத்தை விட்டு வெளியேகி, ஹரம் ஷரீபில் தொழுவதும், தவாப் செய்வதும் வழக்கம். கிழக்கு வெளுக்க சமீபிக்கும்போழ்து வீட்டுக்குத் திரும்பி வந்து, "அதான்" சொன்ன பிறகு மீண்டும் ஹரமுக்கு விஜயஞ்செய்து தொழுவைப்பார்கள். ஓர் இரவு வழக்கம்போல் தவாப் செய்து கொண்டிருந்தபோழ்து, ஒருமனிதர் கஃபாவுக்குச் சமீபம் "முல்தஜிம்" என்னுமிடத்தில் நின்று கொண்டு, "யா அல்லாஹ்! உலகின் அமைதியின்மை, கலவரம் ஆகியவைகளுக்குக் காரணமாக விருப்பவரைப் பற்றியும், அநியாயம், பேராசை முதலிய துற்செய்கையால் அவரவரின் உரிமைகள், அவரவருக்குக் கிடைக்க முடியாமல் தடையாக விருப்பவரைப் பற்றியும், நான் உன் சமூகத்தில் முறையிடுகிறேன்" என்று கூறுவதை கலீபா அவர்கள் செவியுற்று, தவாபை முடித்து, மஸ்ஜிதின் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு அம்மனிதரை யழைத்து அவரோடு கலீபா அவர்கள் சம்பாஷித்தது பின்வருமாறு:—

கலீபா:—தாங்கள் அல்லாஹுத ஆலாவின் சமூகத்தில் முறையிட்டுக் கொண்டவாறு, அமைதியின்மை கலவரம், அநியாயம் ஆகியவைகளைப் புரிவோர் யார்?

மனிதர்:—தாங்கள் என்னை மன்னிப்பதாக வாக்குறுதி செய்தால் உண்மையை வெளியிடுகிறேன். இன்றேல், என் பாவத்தைச் சார்ந்த சிந்தனையே எனக்கு போதியதாகும்.

கலீபா:—தாங்கள் அஞ்சவேண்டாம். உண்மையைப் பகருங்கள்.

மனிதர்:—கனவானே! தங்களையே குறிப்பிட்டு அல்லாஹுத ஆலாவின் சமூகத்தில் நான் முறையிட்டேன். தாங்களே உலகில் அநியாயம், கலவரம் ஆகியவைகளைப் பரவச்செய்திருக்கின்றீர்கள். தங்களின் பேராசை, துற்யிச்சை ஆகியவைகளே பொது மக்களெல்லோரையும் நாசமாக்கி விட்டதோடு, எவருக்கும் அவரவரின் உரிமைகள் கிட்டுவதில்லை.

கலீபா:—தாங்கள் கூறுவதென்ன? எனக்கு துற்யிச்சை யேது! எவ்வஸ்துவின் மீது எனக்குப் பேராசையுண்டு? எல்லா பொக்கிஷங்களும் என் ஸ்வாதீனத்திலிருக்கின்றன. என் சௌகரியத்திற்கு வேண்டுவன வெல்லாம் என்னிட மிருக்கின்றன. இந்நிலைமையில் பிறரின் மீது அநியாயத்தைப் புரியவோ, அல்லது பிறரின் உரிமையைப் பாதிக்கவோ எனக்கவசியமேது?

மனிதர்:—ஓ அமீருல் மூமினீன் அவர்களே! உங்களைக் காட்டினும் வேறு அநியாயக் காரருண்டோ? முஸ்லிம்களுக்குத் தொண்டு புரியவும், அவர்களைப் பாது காக்கவுமே அல்லாஹுத ஆலா உங்களை கலீபாவாக நியமானம் செய்துள்ளான். ஆனால், தாங்கள் அல்லும் பகலும் உல்லாச வாழ்க்கையிலேயே மூழ்கிக் கிடக்கின்றீர்கள். முஸ்லிம்களின் பொருளைப் பிடுங்கி பெரும் பொக்கிஷமாகத் திரட்டியிருக்கின்றீர்கள். ஆதரவற்ற முஸ்லிம்கள் தங்களின் எளிய நிலைமையை யறிவித்து, எதையேனும் பெறுவதற்காக உங்கள் சமுகத்தையடைய முடியாமல், அவர்களைத் தடுக்கும் பொருட்டு வாசலில் பல காவற்காரர்களை நிறுத்தி வைத்திருக்கின்றீர்கள். அநியாயத்திற்கிரையாவோர் உங்கள் சமுகத்தையடைந்து முறையிட்டுக் கொள்ளக்கூடவில்லை. “பைத்துல்மால்” என்னும் பொக்கிஷத்தில் எளியவர், ஆதரவற்றவர் முதலியோர்க்கு பங்குகளிருந்தும் அவர்களைத் தாங்கள் கவனிப்பதில்லை. தாங்கள் தங்களின் உண்மையான எஜமானாகிய அல்லாஹுதஆலாவின் கட்டளையை நிறைவேற்றாது அலக்ஷியஞ் செய்து விட்டதையறிந்த உங்கள் மந்திரி மார்களும், நிர்வாகிகளும் உங்களுக்கு மோசஞ் செய்யத் துணிந்து விட்டதோடு அவர்

கள் பலவகையிலும் பிரஜைகளுக்குத் துன்பத்தை விளைவிக்க ஆரம்பித்துவிட்டனர். அநியாயம்,லஞ்சம் ஆகிய வியாபாரங்கள் சகலவிடத்திலும் மும்முறமாகி விட்டன. அநியாயத்திற்குட் படுவோர் பொதுவாகவே உங்கள் சமுகத்தையடைய முடியாதென்பது திண்ணம். ஒரு சமயம் அநியாயத்திற்குட்பட்ட மனிதன் உங்கள் சமுகத்தையடைந்தாலும் அவனுக்கு நியாயம் கிடைப்பதில்லை. ஏனெனின், அவனைப் பற்றிமுன்னமேயே உத்யோகஸ்தர்கள் பல பொய்யான விஷயங்களைத் தங்களுக்கறிவித்து விடுகிறார்கள். ஆதலின், அநியாயத்திற் கிரையானோர் உங்கள் ஆதரவைப் பெறுவதற்குப் பதிலாகக் கொடூரமாய் சிக்ஷிக்கப் படுவதுமுண்டு. ஆகவே, பிறகு எவருக்கும் உங்கள் சமுகத்தை யடைந்து முறையிட்டுக் கொள்ள தைரியமேற் படுவதில்லை. உங்கள் காலத்தில் முஸ்லிம்களின் கதி அதோகதியாகிவிட்டது. அந்தோ! பனீ உமையாக்களின் காலத்தில் முஸ்லிம்கள் இப்பரிதாபகரமான நிலைமைக்குட் பட்டதில்லை; வெகுதூரத்திலுள்ள ஜனங்களும் கலீபா அவர்களின் சமுகத்தில் ஆஜராகி முறையிட்டுக்கொள்வார்கள். முறையிடுவோர் எவராயினும் அவருக்கு நியாயங் கிடைப்பது திண்ணம்.

ஓ அமீருல் மூமினீனே! நான் சீனதேசத்தில் பிரயாணஞ்செய்வதுண்டு. ஒரு முறை நான் சீனவுக்குச் சென்ற போழ்து "அத்தேசத்து அரசர் செவிடராகி விட்டதால் அநியாயத்திற்கிரையாவோரின் முறைப்பாடு தன் செவிக்கெட்டாது போயின், அன்னவருக்கு நியாயம் கிடைக்காது போமெனக் கருதி, அநியாயத்திற்குட்படுவோர் சிகப்பு உடையையணிய வேண்டுமென்றும், மற்றவர்கள் சிகப்பு உடையையணியக் கூடாதென்றும் கட்டளை யிட்டார். மேலும், அரசர் காலை மாலை இருவேளையும் யானையின் மீதேறி நகரைச் சுற்றிவருவார். சிகப்பு உடையையணிந்தோரைக் கண்டால் அன்னவர்களை யழைத்து அதற்குத்தக்க நியாயம் வழங்குகிறவராகவிருந்தார்" என்று கேள்விப் பட்டேன்.

ஓ அமீருல் மூமினீனே! இணைவைத்து வணங்கும் ஒரு முஷ்ரிக் நியாயத்தை நிலைநிறுத்த இத்தகைய கவனஞ் செலுத்தும் நிலைமையில், மூமின்களின் அமீராகவும், நபித்துவத்தின் குடும்பத்தைச் சார்ந்தவராகவு மிருக்கின்ற தாங்கள் முஸ்லிம்கள் அநியாயத்திற்குட்பட்டு, துன்புறும்படிச் செய்வதும், "பைத்துல் மாலை" பொது நன்மைக் குரிய வழியிற் செலவிடுவதற்கு பதிலாய் உங்கள் ஆசாபாசத்திற்காக சேகரித்து வைத்திருக்கின்றீர்க ளல்லவா? கூலி கொடுக்கும் நாளில் அல்லாஹுதஆலாவின் கேள்விக்குத் தாங்கள்

எவ்வாறு விடை பகருவீர்கள்? ஐஸ்வரியத்தின் இக்குவியல் கூலி கொடுக்கும் நாளில் எப்பயனையளிக்கும்?

கலீபா:—(மேற்கண்ட வார்த்தைகளைச் செவியுற்று, வெகுநேர மழுத பின்னர் கூறியதாவது:—) நான் என் செய்வேன். நல்லோரை எங்கிருந்து கொண்டு வருவேன்.

மனிதர்:— உலமாக்களையும், ஸாலிஹாக்களையும் அழைத்து, அவர்களின் சகாயத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

கலீபா:—அவர்களெல்லோரும் என்னைவிட்டு ஒதுங்கி நிற்கின்றனரே!

மனிதர்:—தாங்கள்புரியும் அநியாயத்தில் அவர்களையும்தாங்கள் சம்பந்தப் படுத்திக் கொள்ளாமலிருக்கும் பொருட்டே, அவர்கள் உங்களைச் சேராது ஒதுங்கியிருக்கின்றனர். தாங்கள் துற்கிருத்தியங்களைவிட்டு, ஷரீஅத்தின் கட்டளைப்படி நற்காரியங்களைப் புரியவும், நியாயம், சத்தியம் ஆகியவைகளை ஸ்திரப்படுத்தவும் முற்படுவீர்களாயின், உலமாக்களும், ஸாலிஹாக்களும் உங்கள் சகாக்களாகி ஆதரவு புரிய நான் பொருப்பேற்றுக் கொள்ளுகிறேன்.

கலீபா:—இவ்வார்த்தையைச் செவியுற்று, "யாஅல்லாஹ்! இவ்வுத்தமரின் உபதேசத்திற்கிணங்க, நான் நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ளும்படி கிருபை செய்தருள்வாயாக" என்று து ஆவிரந்தார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் தொழுகையின் நேரம் வந்து விட்டதால், எல்லோரும் தொழுகையில் ஈடு பட்டுவிட்டனர். தொழுகை முடிந்த பின்னர், கலீபா அவர்களுக்கு உபதேசித்த மனிதர் மறைந்து போய் விட்டார். ஆதலின், "அவரைத் தேடிப்பிடித்து, அழைத்து வர வேண்டும். இன்றேல் உம்மை சிக்ஷிக்கப்படுமென்று 'கலீபா' தம் ஏவலாளிக்கு அறிவித்தார்கள். மறைந்து கொண்ட பெரியாரைத் தேடித் திரிந்த ஏவலாளி அப்பெரியார் கஃபாவை தவாபு செய்துக் கொண்டிருப்பதைக் கண்டு, அவருக்கு கலீபாவின் கட்டளையை அறிவிக்கவே, இப்பெரியார் கலீபா அவர்களின் கட்டளையை மறுத்து, ஏவலாளியை நோக்கி, 'நீர் அஞ்சவேண்டாம். கலீபா உமக்கு எக்கெடுதியையும் புரியவியலாது,' என்று பகர்ந்து, ஒரு துஆவின் கடிதத்தைக் கொடுத்து அதை உன் சட்டைப்பையில் வைத்துக் கொள்ளுமென்று கூறினர்.

ஏவலாளி அச்சம்மேலிட்டவராய் கலீபாவின் சமுகத்திற்கு வந்தார். கலீபா அவர்கள் சிறித்துக் கொண்டு, ஏவலாளியை நோக்கி, உமக்கு சூனியஞ் செய்யத் தெரியுமா? வென்று கேட்கவே, ஏவலாளி நடந்தவைகளைச் சொல்லிக் காட்டினர். கலீபா அவர்கள் துஆ எழுதப்பட்டிருந்த கடிதத்தை வாங்கி, அதற்கு நகல் ஒன்று எடுத்துக்

கொண்டு, ஏவலாளிக்கு 10,000-திரஹம் நன் கொடையளித்து, அப்பெரியார் ஹஜ்ரத் 'கிலர்' அலைஹிஸ்ஸலாமெனத் தெரிகிறதென்று கலீபா அவர்கள் அறிவித்தார்கள்.

ஹிஜ்ரீ 158-வது ஆண்டில் காலீபா மன்ஸூர் மூன்றுவது ஹஜ்ஜைநிறை வேற்றப் புறப்பட்டார்கள். இதுவே கடைசி பிரயாணமாயிற்று. கலீபா அவர்கள் பிரயாணமாவதற்கு முன்னரே நோய் வாய்ப் பட்டிருந்தார்கள். ஆதலின், தம் புத்திரராகிய "முஹம்மதுல் மஹ்" திக்குகிலாபத்துப் பதவியையளித்து, வஸீய்யத்துஞ் செய்து விட்டு புறப்பட்டார்கள். 'பைர் மைமூன்' என்னும் கடைசி விடுதியில் தங்கி யிருந்த போது கலீபா அவர்களின் நோய் கடுமையாயிற்று. துல்ஹஜ்ஜு மாதம் 7வ காலையில் கலீபா அவர்கள் மரண மடைந்தார்கள். கலீபா அவர்ககளின் மெய்க்காவலரும் அடிமையுமாகிய 'ரபீஃ' என்பவர் கலீபா அவர்கள் மரணமடைந்த செய்தியை வெளியிடவில்லை. மந்திரிகளும், மற்ற உத்யோகஸ்தர்களும் வழக்கம் போல் கலீபா அவர்களைச் சந்திக்க வந்தபோழ்து, கலீபா அவர்கள் மரணமடைந்து விட்டதை 'ரபீஃ' அறிவித்து "மஹ்தீ" அவர்களைக் கலீபாவென ஒப்புக்கொள்ளச் செய்து பைஅத் தென்னும் விசுவாசப் பிரமாணத்தைப் பெற்றார். பிறகு இருவரை ஹரம் ஷரீபுக்கு அனுப்பி கஃபாவுக்கெதிரே பொது மக்களிடம் பைஅத் வாங்கப்பட்டது.

கலீபா மன்ஸூர் அவர்களின் ஜனஸா மக்கமா நகருக்குக் கொண்டு வரப்பட்டு "முஅல்லா" வென்னுமிடத்தில் அடக்கப்பட்டது. ஆனுல், பகைவர் பிரேதத்தைஏதேனும் பின்னஞ் செய்வார்களென்றஞ்சி ஒரே உருவத்தில் நூறு கபர்கள் கட்டப் பட்டன. இந்நூறு கபர்களில் கலீபா அவர்கள் இன்னகபரில் அடக்கஞ் செய்யப் பட்டார்களென்று ஜனங்கள் அறியக்கூடவில்லை.

கலீபா அவர்கள் மரணமடைந்த செய்தி பக்தாதுக்கு அனுப்பப்பட்டதோடு கலீபா அவர்கள் தம்மோடு கொண்டு வந்திருந்த நபித்து வத்தின் ஞாபகார்த்தமான வைகளை (நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சிறப்புற்ற அஸா, பரிசுத்தமான அங்கி, முத்திரை மோதிரம்) யும் பக்தாதுக்கு அனுப்பப் பட்டன. கலீபா அவர்கள் மரணமடைந்த செய்தி பக்தாதுக்கு துல்ஹஜ்ஜு மாதம் 15வயில் எட்டிற்று. பக்தாதிலும் ஜனங்கள் மஹ்தியை கலீபாவாக ஒப்புக் கொண்டு, விசுவாசப் பிரமாணஞ் செய்தார்கள்.

பைர் மைமூனை விட்டு பிரயாணமாகி முஅல்லாவைச் சமீபித்த போது, கலீபா அவர்கள் குதிரையிலிருந்து கீழே விழுந்ததாயும், தலை அடி பட்டு மரணமடைந்ததாயும் ஒரு சரித்திரம் கூறுகிறது.

கலீபா மன்ஸூர் அவர்களின் இத்தகைய மரணத்திற்கு இமாம் ஸுபியான ஸௌரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் சாபமே காரணமென்றும் அறிவிக்கப்படுகின்றது. மினாவில் பொதுமக்கள் ஏராளமாய்க் கூடியிருந்தபோழ்து, ஹஜ்ரத் அவர்கள் கடுமையாய் நிந்தித்து, கலீபா அவர்களுக்கு உபதேசஞ் செய்ததோடு, அநியாயம், உலோபித்தனம், துற்யிச்சை ஆகியவைகளின் முடிவையும், அவைகளுக்குரிய தேவ தண்டனையையும் எடுத்துக் காட்டி மன்ஸூர் அவர்களுக்கு அச்சமுறுத்தினார்கள். இதுமட்டுமின்றி, சதா கலீபா மன்ஸூர் அவர்களின் துற்கிருத்தியம், அநியாயம் ஆகியவைகளை ஜனங்களிடையெடுத்துக் காட்டி வந்தார்கள். அவர்கள் மொழியும் உண்மை உரைகளின் மூலமாய் கலீபாஅவர்களுக்கு இமாம் அவர்கள்மீது பகைமையேற்பட்டு விட்டது. ஆதலின், இமாம் அவர்களைக் கொன்றுவிடும்படி கலீபா மன்ஸூர் கட்டளைப் பிறப்பித்ததோடு, ஹஜ்ரத் ஸுபியான ஸௌரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களைத் தூக்கிலிடும்படி பைர் மைமூனிலிருந்து சிலரை அனுப்பிவைத்தார்கள். ஹஜ்ரத் அவர்களுக்காக மக்கமா நகரில் தூக்குமரத்தை நாட்டியுமாயிற்று.

ஹஜ்ரத் அவர்கள் ஹரம் ஷரீபில் படுத்திருந்தார்கள். ஹஜ்ரத் அவர்கள் தங்களின் சிரசை ஹஜ்ரத் புலைலிப்னு இயால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மடியின்மேல் வைத்து, தங்களின் இருபாதங்களை ஹஜ்ரத் இமாம் ஸுபியானிப்னுஐனியா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் மடியில் போட்டிருந்தபோழ்து, "கலீபா மன்ஸூர் மக்கமா நகருக்குச் சமீபத்தில் வந்துகொண்டிருப்பதாயும், ஹஜ்ரத் அவர்களைத் தூக்கில் போடும்படி கட்டளை பிறப்பிக்கப் பட்டிருப்பதாயும் ஜனங்கள் ஹஜ்ரத் அவர்களுக்கு அறிவித்து, எதிரிகள் நம்மை ஏளனஞ் செய்யாதிருக்கும் பொருட்டு; ஹஜ்ரத் அவர்களை மறைந்திருக்கும்படி ஜனங்கள் கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால், இமாம் ஸுபியான ஸௌரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கஃபாவின் திரையைப் பிடித்தவர்களாக ஏதோ துஆவிரந்து, பிறகு தங்களிடத்தில் அமர்ந்தார்கள். இமாம் அவர்கள் அமர்ந்த சில நேரத்திற்குள் கலீபா மன்ஸூர் மரணமடைந்து விட்டதாகச் செய்தி யெட்டிற்று. (தொடரும்)

மஸ்ஜிதும், ராஜீயப் பிரசங்கமும்.

(மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது.)

(57-வது பக்கத் தொடர்ச்சி.)

முஸ்லிம்களை மஸ்ஜிதுக்குள் வரவொட்டாமல் தடுப்பதைக் காட்டினும், அபாரமான அநியாயம் வேறெதுவுமில்லை என்று குர்ஆன்ஷரீப் நன்றாய் விளக்கிக் காட்டியிருக்கின்றது. மஸ்ஜிதை, அல்லது மஸ்ஜிதைச் சார்ந்த பாகத்தை இடித்துத் தகர்ப்பது; மஸ்ஜிதை நாசஞ் செய்யும் காரியமாக விருப்பதுபோலவே, மஸ்ஜிதுகளில் அல்லாஹு தஆலாவை வணங்குவதற்காக வரும் முஸ்லிம்களை மஸ்ஜித்களுக்கு வரவொட்டாமல் தடுப்பதும் மஸ்ஜிதை நாசஞ்செய்வதே யாகும். ஆகவே, மஸ்ஜிதின் நாசத்திற்குரிய காரியத்தைச் செய்யும் நபரும், கூட்டமும் தங்களின் துற்கிருத்தியத்தை முன்னிட்டு பயந்தவர்களாகவே யன்றி, மஸ்ஜிதுக்குள் பிரவேசிக்க மாட்டார்கள். (மேலும்,) அத்தகையோர்க்கு இன்மை, மறுமை ஆகிய இரண்டிலும் கடுந்தண்டனையுண்டு.

* * * *

வணக்கத்தின் உண்மை.

மானிட ஆட்சிகளைச் சார்ந்த கட்டளையை மஸ்ஜிதுகளில் பகிரங்கஞ்செய்வதும், மானிடரைப் பாராட்டுவதும், வணக்கம் வழிபாடு முதலியவைகளைப் போன்றனவல்லவென்றும், எந்த ஆண்டவனுக்காக மஸ்ஜிதைக் கட்டப்பட்டிருக்கின்றதோ, அவ்வாண்டவனையே வணங்குகிறோமென்றும், வணக்கம் புரிவதற்காக அவன் சமுகத்திலேயே நிற்கிறோமென்றும், குத்பாக்களில் அல்லாஹு தஆலாவையே துதித்துப் புகழ்கிறோமென்றும் கூறுவதோடு, மானிடருள் பெரியோராக விருப்பவரையும், கௌரவமும், பெருஞ்செல்வாக்குமுள்ள ஆட்சியையும் புகழ்ந்து, அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் துஆவிரக்கிறோமென்றும் நீங்கள் பகரக்கூடும். ஆனால், ஏற்கத்தகாத உங்கள் வார்த்தையிலுள்ள பிசகை விளக்கும்பொருட்டு இஸ்லாமிய ஏகதெய்வக் கொள்கை, இணைவைப்பதைச் சார்ந்த இஸ்லாமிய தீர்மானம் ஆகியவைகளை விரித்துக் கூறமுற்படுவேனாயின், விவாத விஷயத்தைவிட்டு வெகுதூரம் சென்றுவிட நேரும். மேலும்,

விவாதிக்கப்படும் விஷயத்தோடு சதா நெருங்கியிருக்க வேண்டுமளவு நான் நெருங்கியிருப்பதில்லை. ஆயினும், மக்கமா நகரில் விக்கிரஹ ஆராதனைக்குட்பட்டிருந்த குரைஷிமக்களோடு, இன்று இணைவைத்து விக்கிரஹ ஆராதனை செய்வோரை நீங்கள் ஒப்பிட்டுக் கூறும்பொழுது "உங்கள் வார்த்தையில் (ஏக தெய்வக் கொள்கைக்கு மாறாக) இணைவைக்கும் குற்றமேற்பட் டிருப்பதை மட்டும் நீங்கள் அறிய முடியாத மடையர்களா? வென்று வினவுகின்றேன். இஸ்லாமிய ஏக தெய்வக் கொள்கையின் உண்மையை அறிய முடியாத பற்பல உருவங்களைக் கொண்ட பெரும் வழிகேட்டில் இன்று "இஸ்லாமிய உலகம் சிக்குண்டிருக்கின்றது. இஸ்லாமிய லக்ஷணமில்லாத ஏகதெய்வக் கொள்கையினால் மட்டும் இஸ்லாமுக்கு கௌரவம் கிடையாது என்பதையும், இக்கொள்கையின் பரிபூரணமே இஸ்லாமிய கௌரவத்திற்கவசிய மானது என்பதையும் ஜனங்கள் மறந்து விட்டனரோ? ஏகதெய்வக் கொள்கைக் கின்றியமையாத இஸ்லாமிய லக்ஷணங்களே இக்கொள்கைக் குரிய அடிப்படையாகும்.

இஸ்லாமிய ஏகதெய்வக் கோள்கையின் லக்ஷணங்கள்.

மக்கத்து முஷ்ரிக்குகள் அல்லாஹுத் ஆலாவை மறுக்கும் நாஸ்திகர்களாக விருக்கவில்லை. "நாங்கள் ஆராதனை செய்யும் விக்ரஹங்களே வானம், பூமி முதலியவைகளைச் சிருஷ்டித்த ஆண்டவன்" என்று அவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் கூறியதேயில்லை. இவ்வார்த்தைக்குச் சான்றாக அல்லாஹுதஆலா குர்ஆன்ஷரீபில் எடுத்துக் காட்டி இருப்பவைகளை ஒவ்வொருவரும் உற்று நோக்க வேண்டும்.

"வானம், பூமி முதலியவைகளைச் சிருஷ்டித்து சூரியனையும், சந்திரனையும் இவ்வாச்சரியமான ஒழுங்கு முறையோடு சுற்றி வரும் படிச் செய்தது யார்" என்று மக்கத்து முஷ்ரிக்குகளை நீங்கள் கேட்பீர்களாயின், அவர்கள் தவக்க மின்றி "அல்லாஹ்" என்று கூறுவார்கள். உண்மை இவ்வாறிருக்கும் போழ்து இவ்வழி கேடர் திசைதப்பி எங்கே விரைந்தோடுகின்றனர்? (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

ஓ நபியே! "வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தது யார்?" என்று மக்காவின் முஷ்ரிக்குகளைக் கேட்பீர்களாயின் அல்லாஹ் என்றுதான் விடை பகருவார்கள். நீங்கள் (பிறகு) "அல்லாஹுதஆலா எனக்குத் தொந்தரையை யிழைக்க நாடின், அதையகற்றவோ, அல்லது அல்லாஹுதஆலா எனக்கு தயைபுரியக் கருதுவாராயின் அதைத் தடுக்கவோ, நீங்கள் அல்லாஹுத ஆலாவைத் தவிர்த்து

வணங்கும் வஸ்துவுக்குச் சக்தியுண்டா?" என்றுங்கேளுங்கள். ஓ நபியே! எவ்வாண்டவன் உண்டென்பதைமறுக்க உங்களாற் முடிய வில்லையோ, அவ்வாண்டவனாகிய அல்லாஹுதஆலா எனக்குப் போதும். ஆதரவுவைப்போர் அல்லாஹுதஆலாவையே நட்புக்கொள் ளுகின்றனர்." என்று (மக்காவின்) முஷ்ரிக்கு களுக்குச்சொல்லி விடு ங்கள் (அல்குர்ஆனின்வியாக்கியானம்.)

ஏகதெய்வக்கொள்கைக்கு விரோதமாக, இணைவைப்பதை பொட் டிய உங்கள் நடவடிக்கையோடு, "அல்லாஹ்" உண்டென்றும், "மிஹ் ராப்" முதலிய வணங்குமிடமும், வணக்கமும் அல்லாஹ்வுக்கே உரியன வென்றும் நீங்கள் கருதுவது போலவே, உங்கள் முன்னோர்களான மக்கத்து முஷ்ரிக்குகளும் கருதியிருந்தனர். மேலும், அம்முஷ்ரிக்கு கள் "அல்லாஹ்" இல்லை என்று கூறுவதில்லை. ஆகவே, "அல் லாஹ்" உண்டென்று உறுதிகொண்டிருக்கும் நீங்கள் விக்கிரஹ ஆராதனை செய்வதேன்?" என்று மக்காவின் முஷ்ரிக்குகள் கேட் கப்படும் போழ்து, அவர்கள் கூறும் விடையை குர்ஆன்ஷரீப் வரு மாறு விளக்கியிருக்கிறது:—

"நாங்கள் அல்லாஹ்வையடையும் பொருட்டு, இவ்விக்கிரஹங்கள் எங்களுக்கு சிபார்ஸ் செய்யக்கூடியன வாகவிருப்பதற்காக மட்டுமே, நாங்கள் இவ்விக்கிரஹ ஆராதனை செய்கின்றோம்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்.) (மக்கத்து முஷ்ரிக்குகளின் வார்த்தையை "யூனுஸ்" என்னும் ஸூராவிலும் எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றது.)

"அல்லாஹுதஆலாவைத் தவிர்த்து, இவர்களுக்கு நஷ்டத்தை, அல்லது லாபத்தைச் செய்ய வியலாத விக்கிரஹங்களை இவர்கள் (மக் கத்து முஷ்ரிக்குகள்) வணங்குவதேன்? என்று நீங்கள் இவர்களைக் கேட்கும்போழ்து, "இவ்விக்கிரஹங்கள் ஆண்டவனல்ல. ஆனால், ஆண்டவன் தன்னோடு எங்களைச் சேர்த்துக் கொள்ளும்படி இவைகள் சிபார்ஸ் செய்யக்கூடியனவாகும்" என்றே இவர்கள் கூறுவார்கள். (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

விக்கிரஹ ஆராதனையைப் பொருத்து காரணங் கேட்கும் போழ்து, மக்காவின் முஷ்ரிக்குகள் கூறிய சமாதானங்களை இன்று உங்கள் நாக்களிலிருந்தும் புறப் படுகின்றன வல்லவா?

நீங்களும் உங்களை முஸ்லிம்களென்றே வாதிக்கின்றீர்கள். அல் லாஹுதஆலாவை யொப்புக் கொள்ளுகிறீர்கள். மேலும், அல்லா ஹுதஆலாவை வணங்குதற்காக அவன் சமுகத்தில் நிற்கவேண்டு மென்பதை நீங்கள் மறுப்பதுமில்லை. ஆனால், அவைகளோடு உலகச் சக்தி, பலம் ஆகியவைகளுக் கஞ்சி பெருமையும், கீர்த்தியுமுள்ள

மானிட உருவத்தைக் கொண்ட விக்கிரஹங்களின் சமுகமானது நீங்கள் ஒடுங்கி, அடிபணியத் தகுந்ததென்று கருதுகின்றீர்கள்.

மக்காவின் முஷ்ரிக்குகள் தங்கள் மூதாதைகளின் உருவத்தைக் கொண்ட, விக்கிரஹங்களைச் செய்து வைத்திருந்தார்கள். ஆனால், இவ்வந்தஸ்தை நீங்கள் உலக ஆக்ஷி, சிம்மாசனம், கிரீடம், அதிகாரவர்க்கம், பணப்பெருக்கம் ஆகியவைகளுக்குக் கொடுத்து இவைகளுக்கஞ்சுவது பெரும் விந்தையாகவேயிருக்கின்றது. மேலும், இவைகளின் நாமத்தைச் செவியுற்றதும் நீங்கள் நடுக்கமுறுகின்றீர்கள். ஆகவே "உங்களின் இப்பணிதல் அல்லாஹுத ஆலாவுக்கு மட்டுமே உரியதல்லவா?" என்று நீங்கள் கேட்கப்படுவீர்கள். அல்லாஹுத ஆலாவின் நாமத்திற்கு மட்டும் சொந்தமான கௌரவ பதத்தோடு, அதிகாரவர்க்கம், அரசாங்கம் ஆகியவைகளின் நாமத்தை யுச்சரிக்கின்றீர்கள், அல்லாஹுதஆலாவின் சமுகத்திற்கு மட்டும் அழகாகவிருக்கக்கூடியமுறையில் அரசாங்கத்திற்குத் தலைவணங்குகின்றீர்கள். அல்லாஹுத ஆலாவின் கட்டளையைமட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டிய முறையில், நீங்கள் அதிகாரவர்க்கத்தின் அநியாய கட்டளைக்கும், எதேச்சாதிகார உத்தரவுக்கும் உட்படுகின்றீர்கள். அல்லாஹுத ஆலாவின் வீட்டில் அதிகாரவர்க்கத்தவரின் நாமத்தை வெளியிட்டு, அவர்களைப் பாராட்டுவதற்காக ராகம் பாடுகின்றீர்கள், அவர்களின் கட்டளையை மஸ்ஜிதுகளில் விளம்பரஞ் செய்கின்றீர்கள். இவைகள் இணைவைப்பதைச் சார்ந்த லக்ஷணங்களல்லவாயின், வேறு என்னவென்று கேட்கின்றேன்? கற்களால் தயாரிக்கப்பட்ட உருவமும், பலியிடுவதற்கு வேண்டிய கால்நடைகளுமின்றி, விக்ரஹ ஆராதனையும், ஏகதெய்வக் கொள்கைக்கு விரோதமான இணைவைத்தலும் சாத்தியமன்றோ; ஹிருதயமும், எண்ணமுமின்றி, தேவாலயத்தின் கோபுரம், பூசையின் மேடை ஆகியவைகளால் மட்டும் விக்ரஹ ஆராதனை யாகுமோ?

"அரசர் அதிகாரவர்க்கத்தினர், பணக்காரர், தலைவர் முதலியோர் உண்மையான கடவுளல்ல. ஆனால், எங்களை நன்னிலைமைக்குக் கொண்டு வருவோராயும், சிபார்ஸ்செய்யக்கூடியவராயும், எங்களுக்குக் கௌரவமும், மேன்மையுமுண்டாக்கக் கூடிய வராயுமிருக்கின்றனர் என்று நீங்கள் கூறுவதை யறிவேன். ஏகதெய்வக் கொள்கைக்கு முரண்பட்டதும், சாபத்திற்குரியதுமான உங்கள் எண்ணத்தை யொட்டியும், அல்லாஹுத ஆலாவின் பேரில் ஈமான் கொண்டிருப்போர்க்குத் தகாத உங்கள் காரியங்களை யொட்டியும், உங்களைக் காரணங்கேட்கும்போதும், விக்கிரஹ ஆராதனை செய்து கொண்

டிருந்த மக்காவின் முஷ்ரிக்குகள் கூறியவாறே நீங்களும் விடை பகருகின்றீர்கள். விக்கிரஹங்கள் தங்களின் (மக்கத்து முஷ்ரிக்கு களின்) நந்நிலைமையைக் கோரி, சிபார்ஸ் செய்யக் கூடியனவென்றும், அல்லாஹுதஆலாவின் சமுகத்தையடையும் பொருட்டே, இவ்விக் கிரஹங்களைப் பூசிக்கின்றோமென்றும் மக்காவின் முஷ்ரிக்குகள் கூறியதற்கும், நீங்கள் பகரும் சமாதானத்திற்கும் வித்தியாச முண்டா?

நிச்சயமற்ற உங்கள் வாழ்க்கையைச் சார்ந்த கௌரவம், மனோ யிச்சை ஆகியவைகளை யடையும் பொருட்டு, உண்மை முஸ்லிம்கள் அருவருக்க வேண்டிய இவ்வெல்லா காரியங்களையும் செய்ய நீங்கள் துணிந்து விட்டீர்களென்பதை மறந்து விடாதீர்கள். முழுஉலகத் திற்குச் சொந்தக்காரனும் உண்மை எஜமானனுமாகிய அல்லாஹுத ஆலாவின் பயங்கரமான செங்கோல் நிலவியபோழ்து "நீங்கள் வணங் கும் பொருட்டு ஏற்படுத்திக் கொண்ட பொய்யான சுவாமிகள் இன்று எங்கே? அல்லாஹுதஆலாவோடு அவைகள் இணைவைக்கத் தக்கன வென்று கருதி, அவைகளுக்குத் தலைவணங்கினீர்களல்லவா? என்று உங்களைக் கேட்கப்படும். (அல்குர்ஆனின் வியாக்கியானம்.)

அவ்வமையம் நீங்கள் உங்கள் தலைவரையும் பணக்காரரையும் தேடித்திரிவதை குர்அன்ஷரீபு விளக்கிக் காட்டியிருப்பதாவது:— "உலகில் எங்கள் முன்னேற்றத்தைக் கோரி, சிபார்ஸ் செய்தவர்க ளில் யாரேனும் எங்களுக்குச் சிபார்ஸ் செய்ய, அல்லது நாங்கள் உல கில் முன்செய்த துற்கிருத்தியங்களுக்கு மாறானதும், ஈமானின் லக்ஷ ணத்திற்குரியதுமான நற்காரியங்களைப் புரிய, எங்களை உலகிற்கு மீண்டும் அனுப்பும்படிச்செய்ய இங்கு எவரேனுமுண்டா?" (அல் குர்ஆனின் வியாக்கியானம்.)

மானிடருக்கு நேரானவழியைக் காட்டுவதற்காக அல்லாஹுத ஆலாவால் அனுப்பப்பட்ட தீனை அவர் (மக்கத்து முஷ்ரிக்கு) கள் வீணானதாயும், விளையாட்டுக்குரியதாயும் ஆக்கிவிட்டனர். (மேலும்) உலகவாழ்க்கையை யொட்டிய பேராசையானது, அவர்களை ஏமாற் றத்திற்குட்படுத்திவிட்டது. ஆதலின், உலகில் அவர்கள் இந்நாளை மறந்து, நம் ஆயத்துகளை மறுத்துக் கொண்டிருந்தது போலவே, இன்று நாமும் அவர்களை மறந்துவிடுவோம். (அல்குர்ஆனின் வியாக் கியானம்.)

அல்லாஹுதஆலாவின் பரிசுத்தமான தீனை தங்கள் துற்கிருத் தியத்தின் மூலமாய்வீணானதாயும், விளையாட்டுக்குரிய தாயுமாக்கி, உலகமுடிவுகளை மறந்து திரிந்தவர்களை இவர்கள் மறந்துவிட்டது

போலவே, உலகமுடிவு நாளில் அல்லாஹுத ஆலா மறந்துவிடுவான். ஆகவே, இன்று உலக முடிவு நாளை மறந்துத் திரிவோர் இம்மையில் பெரும் கவலைக்கும், தொந்தரைக்கும் உட்படுவார்களல்லவா?

அல்லாஹுத ஆலாவுக்குமட்டும் சொந்தமான மஸ்ஜித்களில் அவனை தியானிக்க ஒட்டாது தடுத்து, மஸ்ஜிதுகளை நாசஞ்செய்ய முயலுவோரைக் காட்டினும் அநியாயக்காரர் எவருமுண்டா? என்னும் வியாக்கியானத்தைச் சார்ந்த ஆயத்தின் கருத்தானது "பைத்துல் முகத்தஸின் அழிவையொட்டியதா, அல்லது மக்காவின் முஷ்ரிக்குகள் புரிந்த துர்க்கிருத்தியங்களை யொட்டியதா? என்னும் விவாதம் அநேகப்பக்கங்களை யெடுத்துக் கொண்டதாயினும், இவ் விவாதம் நன்மையை விட்டு வெறுமையானதன்று.

மஸ்ஜித்களில் அல்லாஹுத ஆலாவின் தியானத்தைத் தடுத்து, மஸ்ஜித்துகளைப் பாழ்பண்ணியதாகக் கூறும் ஆயத்தானது, மக்காவின் முஷ்ரிக்குகளையே சுட்டிக்காட்டுகிறதென்று மேலே உறுதிசெய்யப்பட்ட பின்னர், இஸ்லாமும், இஸ்லாமைப் பின்பற்றியோரும் மக்காவின் முஷ்ரிக்குகளுக் கறிவுறுத்தியவண்ணமே,ஒவ்வொரு காலத்திலும் மஸ்ஜித்களில் அல்லாஹுத ஆலாவின் தியானத்தைத் தடுக்க முயலுவோர்க்கு முஸ்லிம்கள் அறிவுறுத்தாதிருக்கவியலுமா? முஸ்லிம்களைமஸ்ஜிதெஹராமுக்கு வரவொட்டாமல் தடுத்ததே மக்கத்து முஷ்ரிக்குகளின் எல்லா குற்றங்களிலும் மிகப்பெரியதென்று "தௌபா" என்னும் ஸூரா இறங்கிய போழ்தே விளக்கிக் காட்டப் பட்டிருக்கின்றது. ஆகவே, மக்கத்து முஷ்ரிக்குகளைப்போல் மஸ்ஜித்களுக்கு வரவொட்டாமல் முஸ்லிம்களைத் தடுக்கும் கூட்டம், நபர், சக்தி, அங்கம் முதலியவைகளோடு ஸூரயெ தௌபாவில் கூறியுள்ளவாறே, நாமும் நடந்து கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாவோம்.

முஸ்லிம்களுடையவும், இஸ்லாமுடையவும் பாத்தியதைகள் முஸ்லிம்களுக்கும், மக்காவின் முஷ்ரிக்குகளுக்குமிடையில் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையின் மூலமாய்கௌரவப்படுத்தப்பட்டு,பாதுகாக்கப் பட்டன. ஆனால், அவ்வுடன்படிக்கையை மக்காவின் முஷ்ரிக்குகள் அலக்ஷியஞ்செய்து, முறித்துவிட்டனர். ஆதலின், அல்லாஹுத ஆலா அடியிற்கண்ட விளம்பரத்தைச் செய்தான்.

"ஓ மக்காவாசிகளே! இதுபோழ்து அமைதியின் நான்கு மாதங்களே எஞ்சியிருக்கின்றன. இக்காலத்துள் நீங்கள் நன்ருய் உலாவித் திரியுங்கள். ஆனால், நீங்கள் எவ்வகையிலும் அல்லாஹுத ஆலாவுக்குத் தோல்வியையுண்டு பண்ணமுடியாதென்பதை மனத்துள்ளிருத்திக் கொள்ளுவதோடு, முஸ்லிம்களின் கைகளால் அல்லாஹுத

ஆலா காபர்களை யிழிவுபண்ண விருக்கிறான் என்பதையும் நிச்சயித்துக் கொள்ளுங்கள்'' (அல்குர் ஆனின் வியாக்யானம்.)

அல்லாஹுதஆலா செய்துள்ள இவ் வெச்சரிக்கை யானது ஸூரயெ தௌபா இறங்கிய காலத்திற்கு மட்டும் சொந்தமானதன்று. அமைதியையும், சமாதானத்தையும் உத்தேசித்து முஸ்லிம்களுக்கும், மற்றோர்க்குமிடையில் ஒவ்வொரு காலத்திலும் இத்தகைய உடன்படிக்கைகள் ஏற்பட்டிருக்கின்றன. இத்தகைய உடன்படிக்கைகளின் மூலமாகவே இன்றும் உலகிற் பற்பல பாகங்களிலும் சமாதானம் நிலைத்திருக்கின்றது. ஆகவே, இன்றும் உடன் படிக்கையை மீறுவோர், அமைதி யின்மையாலும், சமாதான பங்கத்தாலுமேற்படும் எல்லா கெடுதிகளுக்கும் பொறுப்பாளியாவர். ஏனெனின் அமைதியின்மை, சமாதான பங்கம் ஆகியவைகளாலேற்படும் எல்லா கெடுதிகளுக்கும் உடன் படிக்கையை மீறுவதே அடிப்படையாக விருக்கிறது.

அல்லாஹுதஆலாவுக்கும், சத்தியத்திற்கு மெதிரியாக விருந்து, மஸ்ஜித்களில் அல்லாஹுதஆலாவின் தியானத்தைத் தடுத்து,அவைகளை நாசஞ்செய்ய முயன்றோரைப்பற்றி,அல்லாஹுத ஆலா கூறி யிருப்பதைக் கவனிக்கவேண்டும். அஃதாவது:—''இத்தகையோர் தங்களின் துர்க் கிருத்தியத்தை முன்னிட்டு பயந்தவர்களாகவேயன்றி, மஸ்ஜிதுக்குள் வரத் தகுதியற்றிருக்கின்றனர்.'' (அல்குர்ஆனின் வியாக்யானம்.) அல்லாஹுதஆலாவின் தியானத்தைத் தடுத்து, மஸ்ஜித்களை நாசஞ் செய்யக் கருதுவோர்க்கு மஸ்ஜித்களில் பிரவேசிக்க உரிமைகிடையாதென்று, குர்ஆன் ஷரீபின் மூலமாய் விளங்கக்கிடக்கின்றது.

இமாப் பக்ருத்தீன் ராஜீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இவ்வாயத்தை யொட்டி வரைந் திருக்கும் மற்றொரு விஷயமாவது:—''உண்மையில் மஸ்ஜிதெ ஹராமும், மற்ற மஸ்ஜித்களும் அதிசீக்கிறத்தில் முஸ்லிம்களின் ஸ்வாதீனத்தி லாக்கப்பட்டு, மக்காவின் முஷ்ரிக்குகள் தங்களின், அனியாயத்திற்குப் பிரதிபலனாக தங்களுக்குப் பெரும் தொந்தரையேற்படு மென்ற பயம், தங்களின் நாசத்திற்குரிய தோற்றம் ஆகியவைகளால் நடுக்க முற்றவற்களாகவேயன்றி, எவரும் மஸ்ஜிதெ ஹராமில் பிரவேசிக்க முடியாத வளவு மக்காவின் முஷ்ரிக்குகள் முஸ்லிம்களின் முன் இழிவு படுத்தப் படுவார்களென்னும் சந்தோஷச் செய்தியை அல்லாஹுதஆலா இவ்வாயத்தின் மூலமாய் முஸ்லிம்களுக் கறிவித்துள்ளான். மேலும், உண்மையை உற்று நோக்கு வோமாயின், அல்லாஹுதஆலா

தான் அறிவித்த நற்செய்தியை அதிசீக்கிரம் நிறைவேற்றியது புலப்படும். அல்லாஹுதஆலா அறிவித்தவாறே முஸ்லிம்கள் கண்டு களித்தனர்.'' (1-வது வால்யூம் 47-வது பக்கம்.)

அல்லாஹுதஆலாவின் தியானத்தைத் தடுத்து, மஸ்ஜிதுகளை நாசஞ் செய்ய முயன்றவர்களையடக்கி, முஸ்லிம்களுக்கு அல்லாஹுதஆலா அளிக்கக் கருதிய ஜெயத்தை அறிவிக்கும் தோரணையில் (2.108) ஆயத்தின் இப்பாகமிருக்கிறதென்பது, இமாம் பக்ருத்தீன் ராஜீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் அபிப்பிராயமாகும். தெய்வீக உண்மைகள் குறிப்பிட்டகாலம், பூமி ஆகியவைகளை மட்டும் சார்ந்தனவன்று. மக்கமா நகரை முஸ்லிம்கள் ஜெயித்த போது மட்டும், இத்தெய்வீக நற்செய்தி பிரதி பலித்ததென்று கொள்ள முடியாது. இஸ்லாமிய சரித்திரத்தைச் சார்ந்த ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு சமயத்திலும், உலகம் நன் கறியும்வண்ணம் இவ்வுண்மைப்பிரகாசமானது தன் அற்புதத்தை வெளியாக்கிக்கொண்டேயிருக்கின்றது. இஸ்லாமிய சரித்திர சம்பந்தமான மற்ற விஷயங்களை நாம் அறியாது போயினும், கான்பூர் மஸ்ஜிதைச்சார்ந்த விஷயத்தை மட்டுமாவது உற்று நோக்குவோமாக. துரதிர்ஷ்டவசமாக ஒரு கூட்டமானது அல்லாஹுதஆலாவின் தியானத்தைத் தடுக்கவும் காரணமாயிற்று. மேலும் அறியாமை, பிடிவாதம், அகங்காரம் ஆகியவைகளாற் ஏற்பட்ட கஷ்டங்கள் சாமான்யமானவையன்று. ஆனால் தியானத்தைத் தடுப்போற்கேற்படவிருக்கும் தோல்வி, உத்தமருக்கு அளிக்கப் படவிருக்கும் ஜெயம் ஆகியவைகளைப் பற்றி, அல்லாஹுதஆலா கூறியுள்ளவாறு கான்பூர் நிகழ்ச்சியிலுங் கூட ஒரு அக்ஷரமும் பிசகாமல் பூர்த்தியாகு மென்பது திண்ணம். அல்லாஹுதஆலாவின் தியானத்தைத் தடுத்து கான்பூர் முஸ்லிம்களை வெளியேற்றியவர்கள் மஸ்ஜிதிலிருந்து சந்தேகமின்றி வெளியேற்றப்படுவார்கள். மேலும் முஸ்லிம்களை தோல்விக்குட்படுத்தக் கருதியவர்கள் சந்தேகமின்றி தோற்கப் படுவார்களென்பது நிச்சயம். அல்லாஹுதஆலா குர்ஆன்ஷரீபில் முஸ்லிம்களுக்கறிவித்த நற்செய்தியைச் சார்ந்த உண்மையானது கான்பூரிலும் பிரகாசிக்க ஆரம்பமாயிற்று. இவ்வாரம்பத்தின் முடிவு இன்னவென்பதையறிய எவராலும் முடியாது. ஆயினும் இன்னவர் ஜயத்துக்குரியவரென்றும், இன்னவர் தோல்விக்குரியவரென்றும் அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் முன்னமேயே தீர்மானமாகிவிட்டது.

மஸ்ஜிதுகளில் அல்லாஹுதஆலாவின் தியானத்தைத் தடுப்பதைக் காட்டினும், அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் வேறு பெரும்

பாவமும், குப்ரும் கிடையாதது போலவே, அவனின் மஸ்ஜிதைச் செழிக்கச் செய்வோரைக் காட்டினும், அல்லாஹுதஆலாவுக்கு அதி கப்பிரியமுள்ளோர் எவரும் கிடையாது. ஏனெனின், இவ்வபாரமான நற்செய்கையானது ஈமானைச் சார்ந்த அனுஷ்டானமும் லக்ஷணமு மாகும்.

இமாம் பக்ருத்தீன் ராஜீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் வரைந்திருப்பதாவது:—மஸ்ஜிதுகளில் அல்லாஹுதஆலாவின் தியானத்தைத் தடுத்து, அவைகளை நாசஞ்செய்ய முயலுவோர் முஷ்ரிக்குகளைக் காட்டினும் இழிவரென்பதே (2: 108) ஆயத்தின் கருத்தெனக் கொள்ளவேண்டியதாக விருக்கின்றது. ஏனெனின்? அல்லாஹுதஆலா இத்துர்க்கிருத்தியத்தை எல்லா அநியாயங்களைக் காட்டினும், பெரிய அநியாயமென்று கூறியிருக்கின்றான். மேலும், ஷிர்க்கும் அநியாயமேயாகும். ஆதலின், இத்துர்க்கிருத்தியமானது ஷிர்க்கைக் காட்டினும் பெரிய "குபர்" என்று ஏற்பட்டுவிட்டது. மேலும், இவ்வண்ணமே மஸ்ஜித்களை நாசஞ்செய்ய முயலுவோர் பெரும்பாவிகளென்று அறிவிக்கப்படுவதால், மஸ்ஜித்களைச் செழிக்கச் செய்யவும் அவைகளைக் கட்டவும் முயலுவோர் ஈமானைச்சார்ந்த பெரும் பாக்கியத்திற்குரியவராக விருக்கின்றனர்.

ஆகவே, கான்பூர் மஸ்ஜிதைக் கட்டவும், அதைச் செழிக்கச் செய்யவும் முயன்ற உண்மையாளரும், மூமின்களும் இவ்வரிய சேவையைப்புரிவதற்கு வேண்டிய நல்லருளை, அல்லாஹுதஆலா இவர்களுக்களித்ததற்காக, இவர்கள் அல்லாஹுதஆலாவைத் துதிக்க வேண்டும்.

(தொடரும்.)

ஈதுல் பிதர்

உலகில் ஒவ்வொரு சமுகத்திற்கும் அதுதன் வாழ்க்கையைச் சார்ந்த, முன்னேற்றத்திற்குரிய காலமும், தினங்களுமுண்டு. அவ்வமயம் அவ்வச்சமூகத்தின் உணர்ச்சியும், உல்லாசமும் மேலோங்குகின்றன. ஆதலின் விசேஷ தினங்களில் ஒவ்வொரு சமூகத்தையும் சார்ந்தோர் ஆயிரக்கணக்காயும், லக்ஷக்கணக்காயும் கூடிக்கொண்டாடுகின்றனர். மேலும் இச்சந்தோஷ தினங்கள் சமூகவாழ்க்கைக்கு இன்

றிமையாத அடிப்படையைப்போல் கருதப்படுகின்றன. ஆனதுபற்றியே உலகில் முனனேற்றத்தையும், ஜீவனையும் பெற்று வாழும் சமூகங்கள், தங்களின் சமூகத்தைச் சார்ந்த சந்தோஷ காலம் ஆகியவைகளை விசேஷமாக நேசிப்பதோடு, கொண்டாட்டங்கள் அதி நன்மையையளிக்கத் தக்கவையாக விருக்கவேண்டுமென்று, சதா முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. "கிரிஸ்மிஸ்" என்னும் வாரமே கிரிஸ்து உலகத்தின் அதிபெரும் விசேஷகாலமாகும். கிரிஸ்மிஸ் டிசம்பர் மாதத்தின் கடைசீ வாரமென்பதை எல்லோருமறிவர். பனியும், குளிருமுள்ள தேசங்களிற் கிரிஸ்மிஸ் வாரமே அதிகுளிரும். கஷ்டமும், தொந்தரையுமுள்ள காலமென்பதை உலகம் நன்கறியும். ஆனுல், எத்தகைய கஷ்டமும் கிரிஸ்துவ சமூகத்தின் விசேஷகாலத்தைக் கொண்டாடாமல் தடுக்கக் கூடவில்லை. மேலும், ஆண்டின் அதிகொடியவாரமானது ஆண்டின் பெரிய சந்தோஷத்திற்கும், உல்லாசத்திற்குமுடைய வாரமாக வேறபட்டிருக்கிறது.

அரசர் முதல் எளியவர்வரை ஒவ்வொரு நபரும் தன் சக்திக்கேற்றவாறு கிரிஸ்மிஸ் வாரத்தைக் கொண்டாடிக் களிப்புறுவது திண்ணம். எளியவனினும் எளியவனுங்கூட கிரிஸ்மிஸைக் கொண்டாட முயலுவான். சுருங்கச் சொல்லுமிடத்து ஐரோப்பியரும், அமெரிக்கரும் உலகத்தின் எப்பாகத்திலிருப்பினும் தங்கள் வீட்டிலிருந்து கொண்டாடும் வண்ணமே கொண்டாடி உல்லாசமடைவதைக் காணலாம். மேலும், அவர்கள் நடுச்சமுத்திரத்தினிடை கப்பலில் பிரயாணஞ்செய்து கொண்டிருந்தாலுஞ்சரி, புகைவண்டியிலேறி பாலைவனத்தைக்கடந்து கொண்டிருந்தாலுஞ்சரி, தங்கள் சமூகத்தின் விசேஷ காலமாகிய கிரிஸ்மிஸை மறந்து விடுவதில்லை.

யூதர்கள் உலகின் ஆட்சியை யிழந்து விட்டனராயினும் இவர்கள் மற்றோரைக் காட்டினும் பெரும் பணப் பெருக்குள்ளோராக விருக்கின்றனர். ஆதலின், யூதர்கள் தங்கள் சமூகத்தைச் சார்ந்தவெல்லா விசேஷதினங்களையும் விடாமல் கொண்டாடிவருகின்றனர். இக்கொண்டாட்டத்தின் மூலமாகவே யூதர்கள் தங்கள் சமூகத்தின் நன்மைக்குரிய சாதனங்களைப் பாதுகாத்து வருகின்றனர். இன்றும் யூதர்கள் வசிக்குமிடங்களில் "ஷிபாத்" என்னும்விசேஷதினத்தையும், "பஸக்" என்னும் விசேஷ தினத்தையும் கொண்டாடுவதைப் பார்க்கலாம்.

மேற் கூறப்பட்டிருப்பது உலகில் முன்னேற்றமும், நாகரீகமும் பெற்றிருக்கின்ற சமூகங்கள் தங்களின் விசேஷதினங்களைக் கொண்டாடும் வரலாருக விருந்துவரும் பொழ்து, நம் நிலைமை யாது? முஸ்லிம்களின் வாழ்க்கையை மேன்மைப்படுத்துவதற்காக

இஸ்லாமும் "ஈதுல் பித்ர்," "ஈதுல் அல்ஹா" என்று இரண்டு விசேஷதினங்களைக் குறிப்பிட்டிருக்கின்றது. ஏனைய சமூகங்கள் தங்களின் சமூக வெற்றிகளையாவது, பெரியாரின் ஞாபகார்த்த தினங்களையாவது விசேஷ நாட்களாகக் கொண்டாடுவதைப் போல், இஸ்லாமும் கொண்டாடவில்லை. இஸ்லாமிய விசேஷதினங்கள் சமூகத்துக்கேற்பட்ட ஜெயத்தை முன்னிட்டதாவது, பெரியாரின் ஜனனம், அல்லது மரணத்தை யொட்டியாவது ஏற்படுத்தப்பட்டனவன்று. ஆனால் இஸ்லாமிய விசேஷதினங்களிரண்டும், மானிடரின் முன்னேற்றத்தையும் சீர்திருத்தத்தையு மொட்டியனவாகும். "ஈதுல் பித்ர்" என்பது குர்ஆன் ஷரீப் இறங்கிய ஞாபகார்த்தத்திற்குரிய விசேஷதினமாகும். ரமலான் மாதத்தில் குர்ஆன்ஷரீப் இறங்கிற்று. ரமலானுக்கு மறுமாதம் ஷவ்வாலாகும். ஷவ்வால் மாதத்தின் 1-வது தேதி முதற் கொண்டே, குர்ஆன்ஷரீபின் காலம் ஆரம்பமாகின்றது. ஆதலின் ஷவ்வால் மாதத்தின் முதலாவது தேதியை இஸ்லாம் விசேஷதினமாகச் செய்திருக்கின்றது.

மானிடருக்கின்றியமையாத நேர்வழியையும், அல்லாஹுதஆலாவின் வணக்கத்தையு மொட்டி, ஹஜரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹிஜாஸின் பாலைவனத்திலிட்ட பூர்வ ஞாபகார்த்தத்தினமே "ஈதுல் அல்ஹா" வாகும். இவ்விரண்டு விசேஷதினங்களும் மானிடரின் கட்டளைக்குட்பட்டு நியமனம் பெற்றனவன்று. ஆனால், வழிகேடென்னும் இருளிற் சிக்குண்டிருந்த மானிடர்கள் பிரகாசத்தையும், ஆத்மார்த்திக நன்மையையும், முன்னேற்றத் தையுமடைந்த தினங்கள் சதா ஞாபகார்த்தத் திற்குரியனவாக விருக்க வேண்டுமென்றே அல்லாஹுதஆலா இவ்விரு தினங்களையும் முஸ்லிம் சமூகத்தின் விசேஷத்தினங்களாகக் குறிப்பிட்டுள்ளான்.

உலகின் மற்ற சமூகங்களைச் சார்ந்த விசேஷத்தினங்கள் அவ்வச்சமூகங்களுக்கு உல்லாச வாழ்க்கையையும், சந்தோஷத்தையும் அளிக்கக் கூடியனவாக விருப்பதுபோல், முஸ்லிம் சமூகத்தின் விசேஷதினங்கள். முஸ்லிம்களுக்குச் சந்தோஷத்தை மூட்டுந் தினங்களாகவிருக்கவேண்டிய தவசிய மல்லவா ?

மற்ற சமூகங்களின் விசேஷ தினங்கள் வருமுன்னமே சந்தோஷ ஆரவாரங்களேற்பட்டு விடுகின்றன. ஒற்றுமை, கூட்டுறவு ஆகியவைகளின் காக்ஷிகள் பார்வையைக் கவரச் செய்கின்றன. அவ்வச் சமூகங்களின் முன்னேற்றத்திற்குரிய சந்தோஷத் தோற்றங்கள் நாட்டின் ஒவ்வொரு பாகத்திலும் ஜ்வலிக்கின்றன. மற்ற சமூகங்களின் விசேஷ தினங்கள் சட்டவரம்பிற்குட்பட்டும், நன்

மைப் பயக்கத்தக்க முறையைப் பின்பற்றியும் கொண்டாடப் படுவதைப் பார்க்கும் போழ்தே, இவ்விசேஷதினங்கள் ஜீவனும், கௌரவமுமுள்ள சமூகங்களின் விசேஷத் தினங்களென்று உலகம் தெரிந்துகொள்ளுகின்றது. முஸ்லிம் ஆட்சிகளிருக்கும் தேசங்களில் இஸ்லாமின் இவ்விரு விசேஷதினங்கள் அதிவிமரிசையாய்க் கொண்டாடப்படுகின்றன. ஆனால், அந்தோ! இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் கொண்டாடும் விசேஷ தினங்களை யொட்டிக் குறிப்பிடத்தக்க விஷயமொன்று மில்லை.

இதுவரை முஸ்லிம் சமூகத்தின் வாழ்க்கைக்கு வேண்டிய திட்டங்களெதுவும் தயாராகாததை யொட்டி வருந்த வேண்டி யிருக்கின்றது. பழைய திட்டங்கள் யாவும் உடைந்துத் தகர்ந்துபோயின. புதிய திட்டங்களைத் தயாரிக்கக் கூடவில்லை. ஆதலின், முஸ்லிம்களின் முன்னேற்றம், கூட்டுறவு ஆகியவைகளைச் சார்ந்த எக்காரியமும் ஒழுங்கான முறையில் தலைதூக்கக் கூடவில்லை. சமூகத்தின் கௌரவம், பெருமை, அமைதி, முன்னேற்றம் ஆகியவைகளுக் கவசியமான ஆரம்ப எல்லையைக்கூட இதுவரை நம் நாடு முகராமலிருப்பது பெரும் ஊழ்வினையாக விருக்கின்றது. ஆனதுபற்றியே, நம் வாழ்க்கையைச் சார்ந்த ஒவ்வொரு காரியமும் ஜெயத்தையாவது, சந்தோஷத்தையாவது பெற்றிருக்கவில்லை.

சகல கௌரவத்தையு மிழந்து தவிக்கின்ற நாட்டைச் சார்ந்தோர்க்கும், கௌரவமுள்ள சமூகங்களின் வரிசையில் இடம்பெற யோக்கிய மற்றிருப்போர்க்கும் தங்களின் முன்னேற்றத்திற்குரிய கட்டடங்களை மறதி, அறியாமை, தூக்கம் ஆகியவைகளை முன்னிட்டுத் தாங்களே இடித்து, நாசஞ்செய்து கொண்டிருப்போர்க்கும், உலகமாறுதலை யொட்டிய எக்கஷ்டத்தைக் கொண்டும் உணர்ச்சிபெறாதோர்க்கும் விசேஷதினங்களில் கொண்டாட பாத்தியதையு முண்டா? அந்தோ! பரிதாபம்!! (பைகாம்)

மஸ்ஜித்களும், சமூகச்சீர்திருத்தமும்.

தங்களின் இல்லங்களில் தொழுதுகொள்ளும் கனவான்களும் முஸ்லிம்களிற் சிலருண்டு. இவர்கள் மஸ்ஜித்களுக்குச் செல்லுவதில் எக்கஷ்டமுங்கிடையாது. அல்லாஹு தஆலாவின் சமூகத்தில் தலைவு

ணங்குவது தங்களுக்கிழிவைத்தரக் கூடியகாரிய மெனக்கருதும் அறி விலிகளுமிருக்கின்றனர். உண்மையில் கௌரவமடையக் கருதும் முஸ்லிம்கள் எவராயினும், அவர் முஸ்லிம் சமூகத்தைச் சீர்திருத் துவதற்குரிய பளுவைச் சுமக்க முன்வரவேண்டும். மஸ்ஜிதுகளுக்குச் செல்ல இஷ்டமில்லாதோர் முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்தை யொட்டிய பளுவைச் சுமக்க வியலாது. சில பிரமுகரின் நாமங்கள்மட்டும் சமூகமல்ல. இத்தகையோர் ஓரிடத்தில் கூடிவிடின் சமூகத்திற்கின்றியமையாத சீர்திருத்தம், பலம், ஒற்றுமை, ஜீவன் ஆகியவைகளேற்பட்டுவிடா.

உபயோகமற்றவரெனக் கருதி ஒதுக்கித்தள்ளப்பட்டிருக்கும் நபர்களைச் சார்ந்த கும்பலே உண்மையில் சமூகமாகும், எளியவரும், மத்தியவகுப்பினருமின்றி சமூகமென்பதே கிடையாது. இன்று உயர் பதவியைப் பெற்றிருப்போர் அநேகமாய் எளியவரிலும், மத்திய வகு ப்பிலும் ஜனனமானவர்களேயாவர். இவ்விரு வகுப்புகளின் சக்தியே சமூகச்சக்தியாகும். இவ்விரு வகுப்பினிடையேற்படும் உணர்ச்சியே சமூக உணர்ச்சியாகும். இவ்விரு வகுப்புகளும் மஸ்ஜிதுகளிலேயே இலகுவாகக் கிடைக்கும். மஸ்ஜிதுகள் இவ்விரு வகுப்பைச்சார்ந்தோ ரின் சீர்திருத்தத்திற்குரிய விடமாகச்செய்வது சுலபமாகும். இப் பொறுப்பை யேற்றுக்கொள்ளுவது உணர்ச்சி பெற்றிருப்போரின் கடமை யல்லவா? காலதேசவர்த்தமானத்தை யறிந்திருப்போரும் விசால நோக்கமுள்ளோரும், பொதுமக்களிடை மதிப்புள்ளோரும் தங்களின் கௌரவத்தைக் காக்கும்பொருட்டாவது, முஸ்லிம் சமூ கத்தைச் சீர்திருத்துவதற்காக மஸ்ஜிதுகளுக்கு விஜயஞ்செய்யவேண் டும். ஒவ்வொரு நாளுந்தவறுமல் ஐந்து தடவை மஸ்ஜிதுகளுக்குச் செல்லவியலாதுபோயினும்,ஒரு தடவையாவதுமஸ்ஜிதுகளையடைந்து, மஸ்ஜிதுகளை முஸ்லிம் சமூகத்தின் சீர்திருத்தத்திற்குற்ற ஸ்தல மாகச் செய்யவேண்டும்.

மஸ்ஜிதுகளைச்சார்ந்த சில முக்கியமான திட்டங்கள்.

மஸ்ஜிதுகளை செழிக்கச் செய்யவும், முஸ்லிம் சமூகத்தைச் சீர்தி ருத்தவும் இன்றியமையாதகாரியங்களாவன:—

(1) ஒவ்வொரு மஸ்ஜிதையுமொட்டி ஒரு (குதுப்காணு) புத்தக சாலை இருக்க வேண்டும். அதில் சரித்திர சம்பந்தமான புத்தகங் களையும், மார்க்க சம்பந்தமான கிரந்தங்களையும், இஸ்லாமிய அறிவை யுண்டு பண்ணுவதோடு, முஸ்லிம்களின் நிலைமை உலக நிகழ்ச்சி ஆகி யவைகளை அறிவுறுத்தக் கூடிய பத்திரிகைகளையும் வைக்க வேண்டும்,

பிரத்தியேகமாய் குத்ப்கானுவை யேற்படுத்த வியலாத விடங்களில் மஸ்ஜிதுகளிலேயே ஒரு பீரோவில் போதிய கிதாபுகளை வைத்து, அவ்விடத்தில் சில பத்திரிகைகளுமிருக்கும்படிச் செய்து விட்டால், இவைகள் பல ஜனங்களின் ஹிருதயத்தை மஸ்ஜிதுகளுக்கிழுத்து வருமென்பது திண்ணம்.

(2) பொதுவாக ஒவ்வொரு முஸ்லிமும், குறிப்பாக படித்தோர் குறைந்த பக்ஷம் மஃரிப் என்னும் நேரத்துத் தொழுகைக்காவது மஸ்ஜிதுகளுக்குச் சென்று தொழுது முடிந்த பின்னர் கொஞ்ச நேரம் அவ்விடத்தில் தங்கிஅன்றுடம் பத்திரிகையிலுள்ள செய்திகளை முஸ்லிம்களுக் கறிவித்துக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனின்? முஸ்லிம் சமூகமானது இன்று இவ்விழிய நிலைமையிற் சிக்குண்டிருப்பதற்குக் காரணம் முஸ்லிம் களின் அறியாமைதான் என்பது திண்ணம். மேலும் பெரும்பான்மையோர் கல்வி வாசனையற்ற பாமரராக விருக்கின்றனர். படித்தவருள்ளும் பலர் பத்திரிகை வாசிப்பதை வீணனகாரியமெனக் கருதியிருக்கின்றனர். ஆதலின், முஸ்லிம் பொது ஜனங்கள் உலக நிகழ்ச்சியை யறிய முடியாமலிருப்பதோடு முஸ்லிம்களை யழிப்பதற்காக முஸ்லிமல்லாதார் என்ன முறைகளைக் கைக்கொண்டிருக்கிறார்க ளென்பதும் முஸ்லிம்களுக்குத்தெரியாது.

(3) படித்தவரும், அறிவுள்ளோரும் பத்திரிகைப் படிப்பதோடு மட்டும் நின்றுவிடாது, தம்முஸ்லிம் சகோதரர்களுக்கு நல் வழிகாட்ட வேண்டும். சமூக ஒற்றுமை, சமூக முன்னேற்றம், சமூகப் பாதுகாப்பு, சமூகச் சீர்திருத்தம் ஆகியவைகளுக் கவசியமான பிரசங்கங்களை ஒவ்வொரு மஸ்ஜிதிலும் குறைந்த பக்ஷம் வாரமொரு முறையாவது நடைபெறும்படி செய்யவேண்டும். வீண் சடங்கு உபயோகமற்ற பழக்கவழக்கம், தரித்திரத்திற்குக் காரணமான பேதமை ஆகியவைகளை யகற்றுவதற்கு வேண்டிய உபாயங்களை முஸ்லிம்களுக் கெடுத்துக்காட்டி, இத்தகைய கெடுதிகளுக்காளாகாதிருக்க முஸ்லிம்களிடம் வாக்குறுதிகள் பெறவேண்டும்.

(4) நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முபாரக்கான காலத்தில் மஸ்ஜிதில் குறிப்பிட்ட நேரங்களில் அம்பெய்தல் முதலிய சாமர்த்தியங்களைக் காட்டப்பட்டன! வாதலின், முஸ்லிம்களின் தேகப்பயிற்சிக்குரிய காரியாகாரியங்களும் நன்முறையோடு நடைபெற்றுவர ஏற்பாடு செய்வதும், சமூகமுன்னேற்றத்தைச் சார்ந்த அரிய காரியமேயாகும்.

(5) முஸ்லிம்களில் பல செல்வாக்குள்ளோர் இன்று ஜும்ஆ வன்றுகூட மஸ்ஜிதுகளுக்கு வருவதில்லை. சட்ட நிருபணச்சபை,

அஸெம்பளி ஆகிய சபைகளில் ஸ்தானம் பெற்றிருக்கும் முஸ்லிம் கனவான்களிலும் பலர் ஜும்ஆவின் தொழுகையைக்கூட லக்ஷியஞ் செய்வதில்லை. ஜும்ஆவன்று தொழுகையின் நேரத்திலும் முஸ்லிம் மெம்பர்கள் சட்ட சபைகளில் உல்லாசமாய் வீற்றிருப்பதைப்பார்க்கலாம். "ஜும்ஆவின் தொழுகை எங்கள்மீது கடமை. ஆதலின், நாங்கள் இவ்வமயம் எக்காரியத்தையும் செய்யக்கூடாது" என்று சொல்ல இத்தகைய பெரும் மகான்கள் தைரியம் பெற்றிருக்கவில்லை. இத்துக்கக்காட்சியானது நம் இழிய நிலைமையை உறுதிப்படுத்துகின்றன வல்லவா? முஸ்லிம்களின் நல்லொழுக்கத்தைச் சார்ந்த ஜீவன் மறித்துவிட்டதாய்க்கூற இதைக்காட்டிலும் வேறு பெரிய சாக்ஷியம் வேண்டுமா? முஸ்லிம்களின் தலைவரென்று சொல்லிக்கொள்ளத் துணிவோர், இனியேனும் மஸ்ஜித்களை யடைந்து தொழுதுவரபழுகவேண்டும்.

(6) முஸ்லிம்கள் கல்வி, வியாபாரம் ஆகியவைகளை யிழந்துவிட்டதோடு, வட்டிக் கடனிலும் சிக்குண்டிருக்கின்றனர். அநேகமாய் வீண் சடங்குகளும் முஸ்லிம்களைத் தரித்திரத்தின் படுகுழியில் தள்ளிவிட்டன. ஆதலின் ஜும்ஆவின் குத்பாக்களை அதிநன்மை பயக்கத்தக்கனவாகவமைக்கவேண்டும். முஸ்லிம் சமூகத்தின்சீர்திருத்தம், முன்னேற்றம் ஆகியவையளுக் கவசியமான உபதேசங்களும், வீண்சடங்குகளையும், வெறும் சாங்கியங்களையும் ஒழிப்பதற்கின்றியமையாத வார்த்தைகளும் குத்பாக்களில் சம்பந்தப் பட்டிருக்கவேண்டும்.

(7) ஜும்ஆ நடைபெறும் ஒவ்வொரு மஸ்ஜிதிலும் மாதர்கள் விஜயஞ்செய்து (குத்பா) பிரசங்கங்களைச் செவியுறும் பொருட்டு, பர்தா முதலிய ஏற்பாடுகளைச்செய்யவேண்டும். சடங்கு சாங்கியங்களாலேற்படும் கஷ்ட நஷ்டங்களை மாதர்களுக் கறிவுறுத்தாதவரை இக்கெடுதிகள் நம் சமூகத்தைவிட்டகலுமென்று கூறவியலாது. (தன்ஜீம்).

மோல்மீன் நிருபம்

(S. S. அப்துல் ஜலீல் எழுதுவது.)

தான் திருடி அயல் வீட்டாளை நம்பாள்:—இவ்வார்த்தையை என் தாய்அடிக்கடி உபயோகப்படுத்துவதைநான்கேள்விப்பட்டிருக்கிறேன். சிறுவயதில் இதன்கருத்து இன்னதெனத் தெரியவில்லை. கொஞ்சம்

வயது சென்றபின் திருடக்கூடிய ஒருத்தி மற்றவளையும் திருடியாகப் பாவிப்பதற்கு இவ்வார்த்தையை உபயோகிக்கிறார்களென தெரிந்து கொண்டேன். சற்று ஆழ்ந்து யோசிக்கும்போழ்து துஷ்டனுயுள்ள ஒருவன் மற்றவர்களையும் கெட்டவர்களாகப் பாவிப்பதற்கும் உப யோகப்படுத்தலா மென்பது இதினின்றும் புலப்படுகின்றது. 'தாருல் இஸ்லாத்தை நான் சிலகாலமாய் வாசித்து வருகிறேன். அதில், தன் சஞ்சிகையிலிருந்து காப்பி யடிப்பதாய் பா. தாவூத்ஷா ருவுத்தர் மாதந் தவராமல் எழுதிவருகிறார். ஆழ்ந்து கவனிக்கும்பொழுது தான் செய்யக்கூடிய காப்பியடிக்கும் வேலையை மற்றவர்பால் சுமத் தாட்டுவதாகவே மேற்சொன்ன முது மொழியினின்றும் புலப்படு கிறது. தாருல் இஸ்லாத்தில் தனக்கு அரபிக்கல்வியில்லாததாகச் சொல்லிக்கொண்டு குர்ஆன் வியாக்யானக் கர்த்தாவெனப் பெயர் சூட்டிக்கொண்டார். நமது தாவூத்ஷா ருவுத்தர் பண்டைக் காலத்து உலமாக்களால் இயற்றப்பெற்ற "தப்ஸீர்பத்ஹுல் மஜீத் முஹம் மதலி M. A. L. L. B. யால் எழுதப் பெற்ற இங்கிலீஷ் ஹோலி குர்ஆன்" ஆகியவைகளைப் பார்த்து காப்பியடித்துக்கொண்டும், பல இங்கிலீஷ் தமிழ் சஞ்சிகைகளைப் பார்த்து வியாசங்களைத் திருடிக் கொண்டும் காலம் கழித்துவரும் இவர், தான் காப்பியடிப்பதேபோல் மற்றவர்களும் காப்பியடிக்கிறார்களென ஹுற்றுவது "தான் திருடி அயல் வீட்டாளை நம்பாள்" என்னும் முது மொழிக்கு முற்றிலும் பொருத்தமாயிருக்கிறது. தனக்கு அரபி தெரியாதென சொல்லிக் கொள்ளும் தாவூத்ஷா ருவுத்தர் தன்னை குர் ஆனின் வியாக்கியானக் கர்த்தா வென்பதுதான் பெரும் விந்தை! இந்நிலைமையில் தன் குர் ஆனைப்பார்த்து மற்றவர்கள் காப்பியடிக்கிறார்களென்பது இதினும் பெரும் விந்தை!! இப்படிப்பட்ட நிலைமையில் இவருக்கு மார்க்கத் தொண்டரென பெயரிடுபவரின் அறிவே அறிவு!!! இவர் சொல்வ தைக் கேட்டுக்கொண்டு சில அறிவிற் சிறந்த இவருடைய நிருபர்க ளும் தங்கள் கட்டுரைகளில் இவரைப்பார்த்து மற்றவர்கள் காப்பியடிக் கிறார்களெனச் சொல்லுவது ஆச்சரியத்தை யுண்டுபண்ணுமலில்லை. அடடா! இவரின் கோஷ்டியார்களின் அறிவுதானென்னே! குர் ஆனு க்கு வியாக்கியானம் செய்பவர்களும் அதைமொழி பெயர்ப்பவர்களும் அரபியின் சட்டதிட்டத்தைக்கற்றுணர்ந்த உலமாக்களென்பதை அறி யாமல் அன்னவர்கள் காப்பியடிக்கிறார்களென சொல்லவும் நாவு எழுந் ததற்கு என்னதான் சொல்லுவது? ஏ தாவூத்ஷா ருவுத்தரே! வேதாந்தம் பேசக்கூடிய உமக்கு நீர் காப்பியடிப்பது புலப்படாமல் போன காரணம் யாது? உமக்கு வழிகாட்டியாயுள்ள பண்டையுலமா

மாக்களை போற்றுவதற்கு பதிலாய் தூற்றுவதைத்தான் நீர் படித்த இங்கலீஷில் கற்றுக் கொண்டீர் போலும். மேனாட்டு வெள்ளையர்கள் இஸ்லாத்தினின்று கல்வி பயின்று இஸ்லாத்தையே தாக்குவதே போல் நீரும் உலமாக்களால் கற்றுக்கொண்டு அன்னவரை தாக்குகிறீரோ ? பலே பேஷ்! உபாத்தியாயரின் படிப்பு சிஷ்யனுக்கும். இது தான் இங்கலீஷின் மகிமை போலும். வெள்ளையர்களையும் அவர்களது தத்துவங்களையும் அல்லும் பகலும் நோட்டமிட்டும், பேசியும் வரும் நீவிரும் நின் குழாத்தினரும் "லார்ட் புஸ்லி இவ்விதம் சொன்னும் ஹெட்லி இவ்வாறு அறைந்தாராம் புஸ்லி பூட் குர்ஆன் மகிமையை இப்படிக் கூறினாராம்" என்று சொல்வதைத் தவிர வேறு என்னத்தைச் சொல்லமுடியும்? திருக் குர்ஆனின் பாஷையாகிய அரபி பயின்றிருந்தாலல்லவோ, சுன்னத் ஜமா அத்திலுள்ளவரென வாய்ப்பறை யடிப்பதேபோல் மனத்தின் கண்ணும் உண்மையாகவிருந்தாலல்லவோ "இமாம் கஸ்ஸாலி இப்படிச் செப்பினர், இமாம் ஸுப்யானு த்தவ்ரி இவ்வாறு கூறினர், இமாம் ராகிப் இன்ன கிரந்தத்தில் இப்படிக் கூறிப்போந்தார்" என்னும் சொற்கள் வெளிவரும். நீவிர் சொல்வதேபோல் மத்ரஸாவில் நுழைந்துவிட்டு அரபி பாடங்களையே கவனியாமல் நம்முடைய சஞ்சிகைகளையும், நம் குழாத்தினரின் வார்த்தைகளையுமே கையாண்டு கொண்டிருந்த சிலரை ஏமாற்றி நுமது காரியாலயத்தி லமர்த்திக் கொண்டு "எம்மிடமும் உலமாக்களில்லாம வில்லை" எனத் தம்பூரடிக்கும் உம்மை தமிழ் முஸ்லிமுலகம் அறியாமலில்லை. இதற்கு முன் இவ்வுலகம் அறியாவிடினும் இதிலிருந்தேனும் நன்கு அறிந்து கொள்ளுமென்பது திண்ணம். இது ஒரு பக்கலிருக்க, உலமாக்களை "முல்லாக்கள் முல்லாக்கள்" என மாதம் தவறிடினும் நுமது சஞ்சிகை தவறாமல் எழுதுகிறீர். மத்ரஸாவில் நுழையாததற்கும் நன்றி செலுத்திய நீவிர் இப்பொழுது அப்படிப்பட்ட மத்ரசாக்களுள் நுழைந்து வந்த சிலபோலி உலமாக்களை அமர்த்திக்கொண்டு ஹதீஸ்களையும் மற்றும் சில அரபி கிரந்தங்களின் பெயர்களையும் வெளியிட்டு, அரபியில் தேறினவரேபோல் நடிக்கிறீர். மாதர்களை அரைடிரஸ் கால் டிரஸுடன் அன்னியருடன் நவீனமுறையில் கைகுலுக்கச் செய்விக்கும் நுமது குருமார்களேபோல் நீவிரும் பெண்டிர்களை வெளிவரும்படிக்கும் கை குலுக்கும் படிக்கும் சஞ்சிகைகளில் எழுதுகிறீர். உண்மையாக அநாசாரங்களை ஒழிக்குமெண்ணமுள்ள நீர், உண்மையான மார்க்கத்தோண்டு புரியும் சிரேஷ்டரும் அரபி கலாசாலையில் சட்டப்படி கல்விபயின்ற வருமான உத்தம புருஷராம் எம் தாஜின் ஆசிரியர்;

அன்னவரால் பர்தா சம்பந்தமாக எடுத்தெழுதப்பெற்ற குர்ஆன் ஆயத்துகளுக்கும் நபி பெருமானார் (சல்) அவர்களால் அருளிச் செய்யப்பட்ட நாயகத்திருமொழிகளுக்கும் ஜனங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு மறுப்பெழுதுவீராக.

ஆயத்துகளையும் ஹதீஸ்களையும் மேற் கோளாக ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுவதாய் பறையடிக்கும் நீர், பர்தா வேண்டாமென்னும் விஷயத்தில் ஒரு ஆயத்து ஒரு ஹதீஸையாகிலும் கோட்பண்ணுமலிருந்த காரணம் யாது? அப்படியிருக்குமாகில் நீவிரேனும் நுமக்கு, மாதந்தவறுவல் வியாச மெழுதி வரும் பல பெயர் கொண்ட மரைக்காயரேனும் (இவர் தாம் தன்னை அஞ்சா நெஞ்சன், கூடல் வாசி, கூடற் குமரன் மரைக்காயர் என சமயோர்ச்சித பெயரிடுபவர்). அடுத்த சஞ்சிகையிலிருந்தே பர்தாவேண்டா மென்பதற்கு குர் ஆன் ஹதீஸ்களை ஆகாரமாகக்கொண்டு வியாசம் எழுதட்டும் படும் பாட்டைப் பார்க்கலாம். பர்தா விஷயத்தில் முஹம்மதலியும், சைய்யத் அமீர் அலியும், கோயமுத்தூர் மாணவரும் இன்னும் சில சிற்றின்ப ஆசைததும்பிய காமிகளும் எழுதும் கட்டுரை தான் தம்முடைய சுன்னத் ஜமாஅத் கொள்கைக்கு முற்றிலும் பொருத்தமானவைபோலும். ஓ தாவூத்ஷா ருவுத்தரே! இம்மட்டோடு நில்லாமல் மார்க்கத்தில் தேற்சி பெற்றவரே போல் 1. சுவர்க்கம் நகரத்தையும் தகர்த்து அப்பால் தள்ளிவிட்டீர் 2. பர்தாவையும் நீக்கி பெண்மணிகள் வெளியில் வந்து உலவவும் கட்டளையிட்டு விட்டீர் 3. பிக்ஹு கிரந்தங்களுள் அஞ்சா நெஞ்சத்துடன் போட்டோப்பட மென்னும் ஹராமான உருவப் படங்களை தீட்டி விட்டீர் 4. தீர்க்க தரிசிகளாயவதரித்த நபிமார்களின் முஃஜிஸாக்களாகிய அதியற்புதங்களை மனோவசியமெனச் செப்பி விட்டீர். (இதற்கு அவரது ஜவாஹிருல் புர்கானை ஆழ்ந்து நோட்டமிடுக. அங்கு நபிமார்களின் முஃஜிஸாக்களுக்கு அர்த்தம் செய்திருப்பது பெரும் வேடிக்கையும் வயிற்றெரிச்சலும் தோன்றும்) 5 குர்ஆனை ஸைன்ஸுக்கு ஒத்த விதமாகஅர்த்த புஷ்டியுடன் அர்த்தம் செய்ய வேண்டுமென நுமது மனம் போனபடியெல்லாம் அர்த்தம் செய்துவிட்டீர். ஸைன்ஸை நீர் கற்றிருந்தால் அதைக்காட்டுமிடம் இது தானா? குர்ஆனையும் சட்டதிட்ட ஒழுங்கின்படி உணர்ந்த பிறகல்லவோ ஸைன்ஸுக்கு ஒற்றபடி திருத்தி அர்த்தம் செய்ய வேண்டும். ஒன்றை மாத்திரம் கற்றுக்கொண்டு அர்த்தம் செய்யத்துணிபு பெற்றதுமின்றி அரபு தமிழ் தப்ஸீரைப் பார்த்துகாப்பியடித்த ஜவாஹிருல் புர்கானுக்கு வியாக்யான கர்த்தா நீர்தாமோ? அந்தோ உமது நிலைமை வெகு பரிதாபகர

மானது ! நுமது அறிவை இவ்விடத்தில் எங்கு செல்லவிட்டீரோ? பரிதாபம் ! !

இம்மட்டுடன் நிருத்திக் கொள்ளாமல் நுமது எழுத்தும் பிரசாரமும் இன்னும் எவ்வளவு தூரம் வெளியேறிச் செல்லுமோ? தமிமூலக பாமர முஸ்லிம்களை இன்னும் என்னென்ன கதிக்காளாக்குவீரோ? இறைவனே அறிவன். விரிவஞ்சி நுமது குறைகளை இம்மட்டுடன் நிறுத்துகின்றேம். முடிவாக முஸ்லிம் சகோதரர்களுக்கு ஒரு வேண்டுகோள் செய்துகொள்கின்றேம்.

முஸ்லிம் சகோதரர்களே! காதியான் கிராமத்தில் பிறந்த ஒருவன் தன்னை முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல உலகத்தவருக்கே இறைவனின் திருத்தூதராய், ஆகவேண்டுமென அளவுகடந்து பகீரதப் பிரயத்தனம் செய்து தாறுமாறாய் உளரி மார்க்கத்தின் வரம்பு தாண்டி முர்தத்தாய் இறந்தான். பா. தாவூத்ஷா ருவுத்தர் அன்னவனேபோல் நம் நாட்டைத்திருத்த இப்பொழுது முன்வந்துள்ளார். இவரது குருபிதாவைப்போல் இவரும் மார்க்கத்தின் மஸ் அலாக்களை மட்டும் புறட்டினால் கீர்த்திபெற முடியாதென குர் ஆனையும் புறட்ட ஆரம்பித்து விட்டார். அப்படிச் செய்வது சரியல்ல வெனக்கூறுவோரை மவ்டூக முல்லாக்களென நாமஞ்சூட்டி இவர்களின் வயிற்றுப் பிழைப்பில் மண்விழுந்து விட்டதென்று குறை கூறுவதாய் பாமரர்களை ஏமாற்றுகிறார்.

அறிவில்லாமலும் மார்க்ககல்வியை ஒருங்கே பயிலாமலும் சில ஆங்கிலங் கற்றவர்களும் நவீன நாகரீகத்தில் மூழ்க கௌபீனம் கட்டிக்கொண்டு குதிக்கத் தயாராயிருந்த சில அறிவிலிகளும் மார்க்கத்தை போதிக்க வந்த உத்தம புருஷரென போற்றத் துணிந்து விட்டனர். இனி உங்கள் பால் விண்ணப்பித்துச் கொள்வதாவது உங்கள் பத்வாக்களை தயைகூர்ந்து மவ்லானா பா. தாவூத்ஷா ருவுத்தருக்கு அனுப்பி விடை பெற்றுக்கொள்ளுங்கள். கற்கும் மாணவர்களும் கற்றுணர்ந்த மௌலவிகளும் தெரிந்து கொள்ளக்கூடாத ஐயங்களை அன்னவருக்கு எழுதி கேட்டுக் கொள்ளுங்கள். எழுத எழுத விரிவதால் இம்மட்டுடன் நிருத்துகின்றோம். சமயோசிதம் போல் இன்னுமொரு முறை எழுத இறைவன் இன்னருள் பாலிப்பானாக. சீரான பாதையில் நேராக நடக்கும் நற்புத்தியை யாவருக்கும் இறைவன் அருள்வானாக ஆமீன். (தாஜுல் இஸ்லாம்)